Registered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 29—No. 8

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | துன்முகி ஆவணி 1956 ஆகஸ்ட் | இதழ் 8

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
2, சீதாராம நகர், கடலூர் N. T.

ஆண்டுச் சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

சமாச அறிக்கை

சமாசச் சார்பில் 6–7–56 வெள்ளிக்கிழமை முதல் பிரதி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில், இராயபுரம், பனைமரத் தொட்டி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில், தவத்திரு. ஐயாறடிகளால் திருத்தொண்டர் புராண விரிவுரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. சென்னையில் மற்றைப் பாகங்களிலும், அருகில் உள்ள ஊர்களிலும் அவரைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்த விருப்பம் உள்ளவர்கள், சமாசத் தலைவருக்குத் தெரிவித்தால் ஏற்பாடு செய்யப்படும்.—அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம். ஏ., (தலைவர், சைவ சித்தாந்த மகா சமாசம்), 15, கிழண்டை மாதாகோயில் தெரு, இராயபுரம், சென்னை-13.

செய்தித் திரட்டு

11–7–56 புதன்: சென்னை அடியார் மன்றம். ம. உ. க. பஞ்சரத்னம் பிள்ளையவர்கள் வாதவூரடிகள் வரலாறு கூறினார்கள்.

அரியலூர் மணிவாசக மன்றம் **13**-ம் ஆண்டு நிறைவு விழா 29–7–56-ல் அரியலூர் வித்துவான் திரு. க. முருகேச முதலியார் அவர்களால் சிறப்புச் செய்தபின், சென்னை, தருமை ஆதின சமயப் பிரசார நிலையத் தலைவர் - வித்துவான் சிவத் திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. சிதம்பரம் திரு. சி. இராமலிங்கம், எம். ஏ. அவர்களும், வித்துவான் திரு. வீ. உலக ஊழியர் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். திருச்சி பெருஞ்சொல் விளக்கனார் - முதுபெரும்புலவர் - அ. மு. சரவண முதலியார் அவர்கள் நன்றிகூற, தேவார ஐயா திரு. சிங்கார வேற் பிள்ளை திருமுறைப் பாடல்களை இன்னிசையுடன் ஓத விழாக் கூட்டம் இனிது முடிவுற்றது.

30–7–56 திங்கள்: கோவைச் சன்மார்க்க சபையில் பாரத சேவா சங்கத்து சுவாமி அத்வைதானந்தர் தற்போதிய சமயநிலை என்பதைப் பற்றிப் பேசினார்கள்.

Regd. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் எம்பலவன்
ஞானகுரு வாளியைஉள் நாடு

மலர் 29	துன்முகி ஆவணி 1956 ஆகஸ்ட்	இதழ் 8

திருவெழுத்து

[ஆசிரியர்]

1. தொடக்கம் :—சமயக் கொள்கை கொண்டவர்கள் எல்லாம் கடவுள் வழிபாடு என்ற ஒழுங்கில் ஈடுபடுவார்கள். அவ்வழிபாட்டில் இறைவனிடத்தில் தாங்கள் செலுத்தும் நன்றியைத் தெரிவித்து அவனுடைய அருள்பெற விரும்பிச் சில கருத்துக்களை வெளியிடுவார்கள். இதற்குக் கடவுள் வணக்கம் என்று பெயர் வழங்கும். குறிப்பிட்ட கருத்துக்களைக் கொண்ட சில மொழித்தொகுதிகள் எல்லாச் சமயங்களிலும் உண்டு. இத்தொகுதிகள் பண்டைப் பெரியோர்களால் வகுக்கப்பட்டு வழிபாட்டு நூலாக வெளிவந்துள்ளன. இவைகள் பொதுவாக அவ்வச் சமயக் கோயில்களிலும் தனி இல்லங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன. அவைகளைப் புனிதச் சொற்களாக மக்கள் போற்றுவது இயல்பு. இவ்விதம் புனிதச் சொற்கள் அல்லது பிரார்த்தனைகள் எல்லா மொழிகளிலும் எல்லா நாடுகளிலும் எல்லாச் சமயங்களிலும் உண்டு. ஒரே கருத்தைக் கொண்ட பிரார்த்தனைகள் பல மொழிகளிலும் வழங்கப் படுகின்றன.

2. நமது நாட்டு வழக்கம் :—நமது நாட்டில் சமயம் மக்களுடைய இரத்தத்தில் ஊறிக் கிடக்கின்றது. ஆகவே வழிபாட்டு நிலையங்களும் நிரம்ப உண்டு. பண்டைக் காலம் முதற்கொண்டே அவைகள் பாராட்டப் பெற்று வந்திருக்

கின்றன. நாளுக்கு நாள் அவைகள் பெருகி விரிந்த சடங்கு களாகவும் மாறிவிட்டன. ஆனால் அவைகளின் அடிப்படையில் காண்பது இறைவனிடம் நன்றி செலுத்துதலும் அவன் அருளைப் பெறவேண்டுவதுமே ஆகும். வழிபாடுகளில் சடங்குகளின் இடையே இன்றியமையாதபடி ஒத்ப்பட்டு வருவது சில வணக்கச் செய்யுட்களே ஆகும். அவைகள் பண்டைய நூல்களில் காணப்படுவனவே ஆகும். அவைகளையே இக்கால மக்களும் ஓதி வருகிறார்கள். அவைகளே புனித உருவம் பெற்றிருக்கின்றன. தற்காலத்தில் புதிதாக ஏற்படுத்தும் சொற்களைக் காட்டிலும் பண்டைக்காலத்துப் பெரியார் வாக்காக இருந்தால் அவைகளுக்கே மதிப்பு மிகுதி. இக் கருத்தைத் தொல்காப்பியம் "நிறைமொழி மாந்தர், மறைமொழிதானே மந்திரம் என்ப" என்கின்றது. அம்முறையில் தென்னாட்டில் தமிழ் மொழியிலும் மற்ற மொழியிலும் மிகவும் விரிவாக ஏற்பட்டிருக்கின்றன. சைவ வைணவக் கோயில்களில் இவைகள் தவறாமல் ஓதப் படுகின்றன.

3. நமது மரபு :—தென்னாட்டுச் சைவக் கோயில்களில் சுருக்கமாகச் சொல்லுமிடத்துப் பஞ்சபுராணமும், விரிவாகச் சொல்லுமிடத்துப் பன்னிரண்டு திருமுறைகளும் ஓதப்படும் தற்காலத்தில் பிள்ளைத் தமிழும், திருப்புகழும் ஓதப்படுகின்றன. வைணவக் கோயில்களிலோ சுருக்கமாகச் சொல்லுமிடத்து நித்திய அனுஷ்டானங்களும், சாத்துமுறையும் விரிவாகக் கூறுமிடத்துத் திவ்வியபிரபந்தங்களும் ஓதப்பெறுகின்றன. தனி இல்லங்களில் தொழுகை நடத்தும்போதும் இவைகளே பாடப்படுகின்றன. மேலும் பிள்ளையார் முருகர் கோயில்களில் பிள்ளையார் அகவல்களும் திருமுருகாற்றுப் படை, கந்தர் சட்டி கவசம், கந்தர் கலிவெண்பா, பிள்ளைத் தமிழ்கள் பாடப்படுகின்றன. அம்மன் கோயில்களில் தேவாரங்களைத் தவிர மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலான வழிபாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன.

இப்படி இருக்க, இராசராச சோழன் இராசேந்திர சோழன் காலமுதல் கோயில்கள் விரிவாக்கப்பட்டபோது வடநாட்டு வழக்கம் தெற்கே வரத்தொடங்கியது. அப்போது வேதாகமங்களுடன் புராண வழிபாடுகளும் புகுந்தன. புராணங்களில் கடவுள் வணக்கத்தை விரிக்கும்

போது வழிபாடுசெய்த பூசகர்கள் 108, 1008 திருநாமங்களைச் சொல்லிக் கடவுள்களை வழிபட்டதாக ஐதிகங்கள் கூறப்பட்டுள்ளன. அவ்வகை வந்த திருநாமங்களையும் கோயில்களில் வழங்கத் தொடங்கினர். அவைகள் தற்காலத்தில் வடமொழி அர்ச்சனைகளாக உருவடைந்திருக்கின்றன.

ஆனல் சுந்தரமூர்த்திகள் காலத்தில் இறைவனே அவ்வடியார்க்குச் "சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே" என்றும், என்னைச் "சொற்றமிழ் பாடுக" என்றும் அருளிச்செய்ததாகச் சேக்கிழார் கூறுகின்றூர். ஆகவே தாய்மொழியிலேயே வழிபாடு நடத்தலாம் என்று ஏற்படுகிறது. வரலாற்றின் தொடர்பாகத் தென்னுட்டிலே தற்போது வடமொழியும் தென்மொழியும் கலந்ததோர் முறையே வழங்கி வருகின்றது. தமிழ்மொழி இல்லாத தெலுங்கு கன்னட நாடுகளிலும் வட மொழியோடு தெலுங்கு கன்னட பத்தியங்களும் கீர்த்தனைகளும் கையாண்டுவரும் வழக்கம் இங்கே குறிப்பிடத் தக்கது.

1. திருவெழுத்து :—கடவுள் வணக்கங்களிலே நன்றி செலுத்தி அருள்பெறும் கருத்து அடிப்படையாக இருக்கும் என்று மேலே கூறப்பட்டது. ஆனல் இறைபணி நிற்றலில் சில சாதனங்கள் இன்றியமையாதவை. அச்சாதனங்களில் முன்னிற்பது இறைவன் திருப்பெயர் உச்சரிப்பது ஆகும். அதனை வடமொழியில் ஜெபம் என்பார்கள். அதுதான் திருவெழுத்து என்பது. சைவத்தில் இதனை ஐந்தெழுத்து (பஞ்சாட்சரம்) என்பார்கள். இதனைச் சைவ அடியார்கள் நால்வர்களும் வற்புறுத்தி யிருக்கிறூர்கள். சம்பந்தர்,

"துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தும்......அஞ்செழுத்துமே"

"காதலாகிக் கசிந்து......நமச்சிவாயவே"

என்றும், அப்பர்

"சொற்றுணை வேதியன்......நமச்சிவாயவே"

என்றும், சுந்தரர்—

"மற்றுப் பற்றெனை......நமச்சிவாயவே"

என்றும், மணிவாசகர்

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க"

என்றும் கூறியிருக்கிறார்கள். இத் திருவெழுத்துக்கள் ஒருவன் சமயக் கொள்கையில் மேலேறுவதற்குப் பயன்படுகின்றன.

இனி வைணவத்திலும் எட்டெழுத்து என்பது அது போலவே வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

'குலம்தரும் செல்வம் தந்திடும்'

என்ற பாசுரம் இதனை வற்புறுத்துகின்றது.

மேலும் உமாபதி சிவாச்சாரியர், இக் கருத்தை வெகு தெளிவாகக் கொடிக் கவியில் கூறுகிறார்.

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்—நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்தும்பின் பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி"

என்ற வெண்பாவின் பொருள் அறிந்துகொள்க.

இதனாலே திருவெழுத்துக்களின் பெருமையை அறிகிறோம். இறைவழி நிற்றலில், தக்க உறுதி பயப்பது திருவெழுத்தாகும் என்று இதனால் அறிய வேண்டும். திருநாமங்களைச் சொல்லச் சொல்ல மனது ஒன்றிய நிலையில் தூய்மை அடையும் என்பது இதன் கருத்து.

5. சமண பௌத்தங்கள்:—சமண பௌத்த சமயங்கள் நமது பாரத கண்டத்தில் தோன்றிய சமயங்கள். அவைகள் வடநாட்டில் தோன்றித் தெற்கேவந்தன. இவைகளிலும் வழிபாடும் கடவுள் வணக்கமும் பிற்காலங்களில் தோன்றின. தமிழில் இச்சமய நூல்களில் கடவுள் வணக்கங்கள் வருவதை நாம் அறிவோம். சீவக சிந்தாமணி சூளாமணி இவைகளில் சமணவணக்கங்களும், மணிமேகலையில்பௌத்த வணக்கமும் வருகின்றன. சமணம் இந்தியாவில் மட்டும் நின்று விட்டது. பௌத்தமோ பிறநாடுகளுக்குச் சென்று விட்டது. மத்திய ஆசியா, கிழக்கு ஆசியா முழுவதும் பௌத்தம் பரவி விட்டது. பௌத்தத்தில் முக்கிய வழிபாடு "பௌத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி,

தருமம் சரணம் கச்சாமி" என்ற மந்திரச் சொற்கள். இவைகளின் பெருமையைப் பௌத்தர்கள் மிகவும் நன்கு விளக்குவார்கள்.

6. காஷ்மீர் பௌத்தம் :—இந்தியாவில் வடகோடியில் இமயமலைச் சரிவில் உள்ளது காஷ்மீர் நாடு. இந்நாட்டில் மிகப் பழைய சமயக் கொள்கைகள் இன்றும்கூட நிலவு கின்றன. தென்னாட்டுச் சைவக் கொள்கைகளை ஒத்து இவ்வடகோடியில் பண்டைச் சைவக் கொள்கை உண்டு. அதனைக் காஷ்மீரச் சைவம் என்பர். முன் ஒரு சஞ்சிகையில் அதைப்பற்றி எழுதியிருக்கிறேன். அங்கே விளங்கியிருந்த ஒரு சைவப் பெண்மணியின் வரலாற்றையும் குறித்திருக் கிறேன். அந்த சைவப் பெண்மணியின் பாடல்கள் சைவ வழிபாட்டின் பெருமையை விளக்குகின்றன.

மேலும் அதே காஷ்மீரத்தில் ஒருவகைப் பௌத்தமும் நிலவுகிறது. அது 'லடக்' என்ற பகுதியில் உள்ளது. மிகவும் உயர்ந்த மலைகளின் பள்ளத்தாக்குகளில் வசிக்கும் பௌத்த குருமார்கள் அந்த சமயத்தைத் தழுவிப் போற்று கிறார்கள். அதில் திருவெழுத்து மிகச் சிறந்த சாதனமாக இருக்கிறது.

'லடக்' பிரதேசத்தில் வசிக்கும் குருமார்கள் லாமா (Lama)க்கள் என்று சொல்லப்படுவார்கள். இவர்கள் பெரிய மடாலயங்களில் வசிப்பார்கள். அவர்கள் எப்போ தும் ஒரு மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே இருப்பார்கள்.

" ஓம் மணிபத்ம ஹம் " என்பது அம்மந்திரம். இதனை எப்போதும் குருமார்கள்மட்டும் அன்றிப் பொதுமக்களும் ஓதுவார்கள். இதனைக் கற்களில் எழுதியும் கறங்குகளில் பொறித்தும் அவைகளை வீசிக்கொண்டும் இருப்பார்கள். வாயில் உச்சரிப்பது மட்டுமன்றி விசிறிகளில் எழுதி வீசிக் கொண்டே இருப்பார்கள். ஒவ்வொரு ஊரிலும் இம்மந்திரம் எழுதிய கற்கள் 4 அடி முதல் ஒரு மைல் அளவும் நீண் டிருக்கும். இவைகளைப் படிப்பதாலும், பார்ப்பதாலும், உச்சரிப்பதாலும் மிகுந்த நன்மை உண்டாகுமாம். மற்றும் நோயுற்ற காலங்களிலும் துயரம் உற்ற காலங்களிலும் அவைகளை விலக்குதற்கு இம்மந்திரத்தை லாமாக்கள் பயன் படுத்துவார்கள்.

இதனை நேரில் கண்ட அமெரிக்க நிருபதி திரு. டாக் லாஸ் என்பவர் தாம் எழுதிய இமாலயப் பயண நூலில் அடியிற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

"ஓம் மணிபத்ம ஹம்" என்ற மந்திரத்தின் பொருள், 'ஓ தாமரைமலர்மிசை அமைந்த மணியே' (இரத்தினமே) என்பதாகும். தாமரை எல்லா மலர்களிலும் அழகானது. ஆனால் அதுவோ சேற்றில் உண்டாகிறது. அது அசுத்த மான இடத்தில் முளைக்கிறது; விஷநோய், கடுந்துன்பம், பஞ்சதரித்திரம் இவைகளில் தோன்றி அவ்விடங்களுக்கு தூய்மை தருகிறது. புத்தர் ஒரு தாமரையில் தோன்றினார். இழிவும், தரித்திரமும், அசுத்தமும் கொண்ட மனிதனுக்கு அபயம்தந்து தூயவன் ஆக்குகிறார். இத்திய குணங்களி லிருந்து நற்குணமும், நன்மையும் தோன்றும். மடாலயத் தில் குருமார்கள் திருவிழாவில் இம்மந்திரத்தை உச்சரிக்க மற்றவர்களும் சொல்ல நம்பிக்கை அற்றவனையும், அது நம்பிக்கை உண்டுபண்ணும் அமைதியையும், உற்சாகத் தையும் தருகிறது. நான் அங்கு சென்றபோது அதன் வசிகர இயல்பு என்னையும் இழுத்துக்கொண்டது. நானும் அதனைச் சொன்னேன். எனக்கும் மற்ற எல்லோருக்கும் அது பெருமகிழ்ச்சி தந்தது. ஆகவே அம்மந்திரத்தின் ஆற்றலே அதுவே தெரிவிக்கிறது அல்லவா?"

7. மேல்நாட்டுச் சமயங்கள் :—இனி இசுலாம் சமயத் தையும் விவிலிய சமயத்தையும் எடுத்துக் கொள்வோம். இசுலாமிய சமயத்தில் "லா இலாஹ இல்லா-ல்லாஹு" | முகம்மது ரசூலு-ல்லாஹ் || என்பதே சிறந்த மந்திரம். இதனை எல்லா முஸ்லிம்களும் உச்சரிப்பார்கள். திருக்குரா னில் இது முதலில் உள்ளது. இதன் பொருள் 'அல்லா வைத் தவிர வேறு கடவுள் இல்லை. அல்லாவினுடைய தூதர் முகமது ஆவர்' என்பதே. இதைப் போலவே விவிலி யத்திலும் சில கீதங்கள் உண்டு. அவைகள் கிரீக் லத்தீன் மொழிகளிலும் அதன் முன் இபிரேய மொழியிலும் இருந் தன. அவைகளை ஆங்கிலத்திலும், தற்போது தமிழிலும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். தமிழ் மொழி பெயர்ப்பு சரியாக இல்லை. தமிழ் தெரியாத சிலர் மொழிபெயர்த்து விட்டார்கள். தூய்மையான தமிழில் மொழி பெயர்த்

திருந்தால் நன்றாக இருக்கும். ஆகவே இந்த சமயங்களி லும் திரு எழுத்துக்கள் உண்டு என்று அறியலாம்.

8. முடிவு:—ஆகவே சமயக் கொள்கையில் மிகச் சிறப் பாகச் சில புனித சொற்கள் உண்டு. அவைகளை உச்சரிப் பதிலேயே அமைதியும் மனச் சாந்தியும் ஏற்படுகிறது. சாதனைகள் செய்வதற்கும் பயன்படுகின்றன. அவைகளில் சைவச் சார்பில் சிறந்தது திருவைந் தெழுத்து ஆகும். அப்படிப்பட்ட உச்சரிப்புகளுக்கு மிகப்பெருமை உண்டு எனப் பெரியோர்கள் கூறுகிறார்கள். நாமும் அனுபவத்தில் அறிவோம்.

சித்தாந்த அறிவு - இளைஞருக்கு

தி. கி. நாராயணசாமி

அளவை என்பது பிரமாணம். அளத்தற்குரிய கருவி, ஆன்ம அறிவு. அது காட்சி, அனுமானம், ஆகமம் என்று மூன்று வகைப்படும். நம்முடைய இந்திரியங்களால் பொருளை நேரே அறிதல் காட்சி. கண்ணால் மலையை, பூமியை, கடலை நேரே காண்பதால், அவை காட்சிப் பிரமாணத்துட்பட்டவை. கண்ட ஓர் உண்மையைக் கொண்டு, காணாத மற்றோர் உண்மையைக் கருதல் அனு மானப் பிரமாணம். (அனுமித்தல் - கருதல்) புகை வரும் வீட்டினுள் நெருப்பு உண்டு என்று அறிதல் அனுமானம். ஆகமங்களில் கூறிய மாமேரு, தெய்வ உலகம், நரகம் முதலியன உண்டென்று அறிதல் ஆகமப் பிரமாணம். உலகப் பொருள்களை, இலக்கம், துலாக்கோல், நாழி, கோல் பிறவற்றால் அளத்தல் கூடும்.

காட்சி 8 [1]வகைப்படும். அநுமானம் 2 · [2]வகைப்படும். [3]வேதம் 4. [4]உபவேதங்கள் 4. [5]சிவாகமங்கள் 28. இவை

---

1. நிர்விகற்பம், சவிகற்பம், ஐயம், திரிவு; வாயில், மானதம், யோகம், தன் வேதனை.

2. தன் பொருட்டு, பிறர்பொருட்டு.

3. இருக்கு, எஜுர், சாமம், அதர்வணம்.

4. ஆயுர், தனுர், காந்தர்வம், அர்த்தம்.

தவிர வேறு ஆகமங்கள் உள. அவை சைவர்களால் சிவாகமங்களைப்போல் கொள்ளத்தக்கன அல்ல. வேதம் பொது நூல். ஆகமம் சைவத்திற்கே உரிய சிறப்பு நூல். இதுவே இவற்றிற்குள்ள வேறுபாடு.

உபநிடதம் வேதத்தின் ஞான பாதத்தைக் கூறுவது; வேதாந்தம் என்பதும் அதுவே. ஆகமங்களின் ஞானபாதம்-சித்தாந்தம். 'முடிந்த முடிவு' என்பது அதன் பொருள். அதற்குமேல் முடிவு இல்லை. [6]வேத அங்கங்கள் 6.

சித்தாந்த நூல்கள் தமிழில் உள்ளன 14. அவை :— (1) திருவியலூர் உய்யவந்த தேவர் திருவுந்தியார் (2) திருக்கடவூர் உய்யவந்த தேவர் திருக்களிற்றுப்படியார் (3) திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டார் சிவஞானபோதம் (4) திருத்துறையூர் அருள்நந்திசிவம் சிவஞானசித்தியார் (5) இருபா இருபஃது (6) திருவதிகை மனவாசகம்கடந்தார் உண்மை விளக்கம் (7) கொற்றவன்குடி உமாபதிசிவம் சிவப்பிரகாசம் (8) திருவருட்பயன் (9) வினா வெண்பா (10)போற்றிப்பஃறொடை (11) கொடிக்கவி (12) நெஞ்சுவிடு தூது (13) சங்கற்பநிராகரணம் (14) உண்மை நெறி விளக்கம் செய்தவர் உமாபதி சிவம் என்றும் சீர்காழி தத்துவநாதர் என்றும் கூறுவர். இவை தவிர, துகளறுபோதம், தத்துவ விளக்கம், தத்துவப் பிரகாசம், பண்டார சாத்திரம் முதலிய பல நூல்கள் உள. இவற்றுள், சிவஞான போதம்-முதல் நூல்; சிவஞானசித்தியார் - வழிநூல்; . சிவப்பிரகாசம்-சார்பு நூல்.

தத்துவம் என்றால் உண்மைப்பொருள். திருமூலர் இதனை முதல் என்றார். அது ஆன்ம . தத்துவம், வித்தியா தத்துவம், சிவதத்துவம் என்று மூன்று வகைப்படும்.

---

5. காமிகம், யோகம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பாரமேச்சுரம், கிரணம், வாதுளம்.

6. மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம்.

ஆன்ம முதல் 24. அவை [1]பூதங்கள் 5. [2]ஞானேந்திரியங்கள் 5. [3]தன்மாத்திரைகள் 5. [4]கன்மேந்திரியங்கள் 5. [5]அந்தக்கரணங்கள் 4. ஆக 24. [6]வித்தியாமுதல் 7. [7]சிவமுதல் 5. மேல் காட்டிய 36-ம் அகக் கருவிகள்.

[8]பிருதுவியின் கூறு 5. [9]அப்புவின் கூறு 5. [10]தேயுவின் கூறு5. [11]வாயுவின் கூறு5. [12]ஆகாயத்தின் கூறு5. [13]வாயுக்கள் 10. [14]நாடிகள் 10. [15]கன்மேந்திரியங்களின் தொழில்

---

1. மண் (பிருதிவி), நீர் (அப்பு), தீ (தேயு), காற்று (வாயு), ஆகாயம்.

2. மெய் (துவக்கு), வாய் (சிங்ஙுவை), கண் (சட்சு), மூக்கு (ஆக்கிராணம்), செவி (சுரோத்திரம்).

3. சுவை (ரசம்), ஒளி (ரூபம்), ஊறு (பரிசம்), ஓசை (சத்தம்), நாற்றம் (கந்தம்).

4. வாய் (வாக்கு), கால் (பாதம்), கை (பாணி), எருவாய் (பாயுரு), கருவாய் (உபத்தம்).

5. மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.

6. காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை.

7. சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சத்தி, சிவம்.

8. மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை. பிருதுவியின் கூறு 5.

9. நீர், உதிரம், மச்சை, மூளை, சுக்கிலம். அப்புவின் கூறு 5.

10. ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல். தேயுவின் கூறு 5.

11. ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல். வாயுவின் கூறு 5.

12. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம். ஆகாயக் கூறு 5.

13. பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன். வாயு-10.

14. இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி. நாடி 10.

15. வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம். கன்மேந்திரியத் தொழில்கள் 5.

கள் 5. [16]வாக்குகள் 4. [17]குணங்கள் 3. [18]ஈஷணைத்திரயங்கள் 3. ஆக 60. அகப்புறக் கருவிகள் மொத்தம் 96.

அத்துவா என்பது வழி. அது மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என 6 வகைப்படும். ஐந்தொழில்கள், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலங்கள் 3. சந்திர, சூரிய, அக்கினி மண்டலங்கள் 3. கேவல, சகல, சுத்த அவஸ்தைகள் 3. நிவிர்த்தி கலை, பிரதிஷ்டா கலை, வித்தியா கலை, சாந்தி கலை, சாந்தியதீதகலை எனக் கலைகள் 5. அன்னமய, பிராணமய, மனோமய, ஞானமய, ஆனந்தமய கோசங்கள் 5. அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம் என்ற தோற்றங்கள் 4. சுரர், நரர், மிருகம், பறவை, நீர் வாழ்வன, ஊர்வன, தாவரம் முதலியன எழுவகைப் பிறப்புகள். தன்மை, முன்னிலை, படர்க்கை என இடங்கள் 3. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என ஆதாரம் 6.

பொது அறிவு: அநாதி நித்தியம் என்றால் ஆதி இன்றி என்றும் உள்ளது. சூனியத்தில் இருந்து ஒன்றும் உண்டாகாது. இல்லது தோன்றாது; உள்ளது அழியாது என்பது சத்காரியவாதம். ஒளிக்குள் இருள் அடங்கும், தன் தன்மையில் என்றும் மாறாது இருப்பது இயற்கைப் பொருள். சத்து என்றால் என்றைக்கும் உள்ளது. நிலை மாறுதலுடன் என்றும் உள்ளது அசத்து. சித்து என்றால் அறிவுடையது. ஆனந்தம் என்பது பேரின்பம். சித்திலிருந்து அசித்து தோன்றாது. ஆகாயத்துள் சூக்கும ஆகாயம் இருக்கிறது. ஒலிக்கு உருவம் உண்டு. கண்ணுக்குப் புலப்படாத உருவத்தை உடையது அருவப் பொருள். அருவத்திற்கும் உருவம் உண்டு. சடம் தானே இயங்காது. காரணம் காரியத்திலும் முந்தினது. முதல், துணை, நிமித்தம் எனக் காரணங்கள் 3. மூலகாரணத்திற்குக் காரணம் கேட்கக்கூடாது. காரணமின்றிக் காரியம் நிகழாது. குணம்

16. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி. வாக்குகள் 4

17. சத்துவம், ரஜஸ், தமஸ். குணம் 3.

18. புத்திர ஏடணை, உலக ஏடணை, அர்த்த ஏடணை. ஈஷணைத்திரயங்கள் 3.

குணியைவிட்டு நீங்காது. கண்ணுக்கு ஒளி உண்டு. அருவப் பொருள்கள் ஒன்றோடு ஒன்று, கண்ஒளி கதிர்ஒளியோடு கலப்பதுபோல் கலக்கும்.

கடவுள் மேலானவர். ஒருவர். அவர் குணங்கள் எட்டு. (தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர் வினனாதல், முற்றும் உணர்தல், பாசங்களினீங்குதல், பேரரு ளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை). விறகில் தீ மறைந்து நிற்றல்போல கடவுளும் உலகத்தினுள் மறைந்து நிற்கின்றார். அவர் அருவம், உருவம், உருவாஅருவம் என்ற மூன்றிலும் அதற்கு அப்பாலும் நிற்பர். மாறுதலில்லாதவர் (நிர்விகாரி). ஐந் தொழிலை எண்ணத்தால் நடத்துபவர். மாயையால் உலகத்தை உண்டாக்குபவர். உலகுக்கு முதற்காரணம் மாயை ; துணைக்காரணம் இறைவனது வல்லமை (சக்தி); நிமித்த காரணம் கடவுள். அவன் யாருக்கும் முதல்வன் ; அவருக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை. அவரது உண்மைநிலை (சொரூபம்) ஆனந்தம். உலகை அயனைக்கொண்டு படைக் கிறார். அரியைக்கொண்டு காப்பாற்றுகிறார். உருத்திரனைக் கொண்டு அழிக்கிறார். மழைக்கு உலகம் கைம்மாறுசெய்ய முடியாததுபோல, உயிர் கடவுளுக்குக் கைம்மாறுசெய்ய முடியாது. கடவுளுக்கு ஐந்து பூதம், சூரியன், சந்திரன், ஆன்மா அட்ட மூர்த்தங்கள். இறைவனே பிறவிநோயை நீக்கமுடியும். வண்ணான் பலவீட்டுப் புடவைகளை அறிந்து எடுத்துக் கொடுப்பதுபோல், கடவுள் அவரவர் கன்மங்களை அளந்து எடுத்துக் கொடுப்பார். அவர் அஞ்ஞானிக்குப் பாலில் நெய்போல மறைந்து, மெய்ஞ்ஞானிக்குத் தயிரில் வெண்ணெய்போல வெளிப்படுகிறார். அஞ்ஞான இருளை ஓட்டுகிறார். நம் இன்ப துன்பம் கடவுளுக்கு இல்லை. அவனன்றி ஆன்ம அறிவு நடைபெறாது. அவர், கண்ணாடி யைப்போல நின்மலனாயிருக்கிறார். அவர் எல்லாச் சுதந் திரமும் உடையவர். உடலில் உயிர் கலந்திருத்தல்போல உயிரில் இறைவன் கலந்திருக்கிறார். அவர் எங்கும் இருத் தலால் அவரை அறியாது ஒன்றும் நாம் செய்யமுடியாது. அன்பர் உள்ளம் அவருக்குக் கோயில். அவரைப் பதி ஞானத்தால் அறியலாம். அவருக்கு முதல் இறுதி இல்லை. அவர் திருமேனி செங்கனலையும் செவ்வானத்தையும்

ஒத்தது. நம் அறிவு மின்மினிபோல; கடவுள் அறிவு கதிரவன் ஒளிபோல. ஐந்தொழில் அதிபர்கள் அயன், அரி, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன். கல்லினுள் தேரை போல உயிரினுள் கடவுள் மறைந்திருக்கிறார். அவர் ஆண் அல்லர், பெண் அல்லர், அலி அல்லர். சூரியனைப்போல சிவம், அவன் கதிர்களைப்போல சக்தி; அதில் கலக்கும் கண் ஒளிபோல ஆன்மா. காற்றுக்குரிய வாசனை ஆகாயத்திற்கு இல்லை; அதுபோல ஆணவம் இறைவனுக்கு இல்லை. பரா சக்தி, திரோதான சக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி, ஞான சக்தி ஆக 5 சக்திகள் ஈசனுக்கு உண்டு. பராசக்தியின் உண்மை நிலை ஞானமயம். திரோதான சக்தி-மறைக்கும் சக்தி. பூவின் மணம்போல, தண்ணீரில் குளிர்ச்சிபோல, நெருப்பின் சூடுபோல சக்தி இறைவனோடு பிரிவின்றி நிற்கின்றது. சக்தி வேறுபாட்டால் சிவன், சத்தர், உத்தி யுத்தர், பிரவிருத்தர் என்று மூன்று வகைப்படுவர். சூக்கும ஐந்தொழில் செய்பவர் சத்தர். அவருக்கு வேறு பெயர் இலயர்.

பரு. கட்டுண்டது. அதாவது ஆணவ மலத்தால் கட்டுண்டது. ஆணவத்தால், உயிர் வியாபகம் அணுத்தன்மை எய்தியதால், உயிர்க்கு அணு என்று பெயர். உயிர் ஒன்று அல்ல. எண்ண முடியாத பல. உயிரின் முக்கிய குணம் சார்ந்ததின் வண்ணமாய் நிற்பது. உயிர் கடவுளுடன் அடங்கின நிறைவாய் (வியாப்பியம்) நிற்கும். உயிருக்குக் கடவுள் தன்மை இல்லாததால், அது கடவுளிடத்திலிருந்து வந்ததல்ல. உயிருக்கு உடல்கொடுத்தல், இருளில் இருந்தவனுக்கு விளக்குக் கொடுத்ததற்குச் சமமாகும். உயிருக்குச் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற 5 நிலைகள் உண்டு. உயிர்க்கு இச்சை, ஞானம், கிரியை என்ற 3 சத்திகளுண்டு. உயிர் உலவாக்கிழிபோல் தொகையில் குறைவுபடாது. நீர்ப்பரப்பில் மீன் சஞ்சரிப்பதுபோல், உயிர் ஈசனுக்குள் சஞ்சரிக்கிறது. உயிரின் அறிவு முக்குணவசம் ஆனதால் நிலையுடையதன்று. (ஆன்மபோதம்-தற்போதம்) இறைவன் அறிவித்தால் உயிர் அறியும். உயிர், உடல்போன்ற சிறையுள் கட்டுப்படுவது, முன்வினையை அனுபவிப்பதற்காக. நீ, நான் என்று சொல்லுவதாலும், சுகதுக்க வேறுபாட்டாலும், அறிவு

வேறுபாட்டாலும் தனித்தனி பொருள் ஆகிறது. உலகம் உயிருக்காக உண்டாக்கப்பட்டது. கேவலம், சகலம், சுத்தம் என்பன உயிருக்கு உரிய மூன்று நிலைகள். ஆணவத்தோடு மாத்திரம் நிற்றல் கேவலம். உடலோடு நிற்பது சகலம். இறைவனது இன்பம் அனுபவித்துக்கொண்டிருப்பது சுத்தம். உயிர்களின் வகை 3. அவை சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்பவை.

பாசம். ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும். ஆணவம், உயிரோடு செம்பில் களிம்புபோல், ஆதியின்றி தொடர்பு உற்று இருக்கும். விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என்ற 8 ஆணவத்தின் குணங்கள். ஆணவமாகிய சடத்திற்கு நஞ்சைப்போல் செயலுண்டு. ஆணவ சத்தியை இறைவன் மாயா தேகத்தைக்கொண்டு நீக்குவான். ஆணவ சக்தி மெய்ஞ்ஞானத்தால் அடங்கும். ஆணவமலம் இருளைப்போல் எங்கும் நிறைந்திருக்கும். ஆணவம், அருவருக்கத்தக்க, துன்பமாயிருக்கிற இன்பங்களில் ஆசையையூட்டும். மேக படலம், சூரியனை உலகிற்கு மறைப்பதுபோல், ஆணவம் சிவனை உயிருக்கு மறைக்கிறது. முத்தியில் ஆணவம் என்ற முதல்குன்றி இருக்குமே அன்றி முதல் கெடாது. கன்மம் நம்முடைய வினை. அது நல்வினை, தீவினை என இருவகைப்படும். நல்வினை தீவினை, மன வாக்குக் காயங்களினல் வரும். மனத்தால்செய்த கன்மம் மானதம். வாக்கினல் செய்த கன்மம் வாசிகம். காயத்தால் செய்த கன்மம் காயிகம். நல்வினைக்குத் தீவினையாவது, தீவினைக்கு நல்வினையாவது ஈடு அன்று. தனித்தனி நுகர்ந்தே தீரவேண்டும். வேதம், ஆகமம் இவை விதித்தபடி நடத்துவது நன்மை. தீமை என்பது அவை விதித்ததைக் கடந்து நடத்துவது. நாம் இப்போது செய்யும் இருவினைகள் ஆகாமியம்; அனுபவிக்கிற இருவினைகள் பிராரத்துவம்; அனுபவியாமல் எஞ்சிக் கிடக்கிற கன்மம் சஞ்சிதம். சஞ்சிதம் குரு கிருபையால் போம். ஆகாமியம் பிராரத்துவம் தேகத்தோடு போம். கன்மம் பரிகாரத்தாலும் அனுபவத்தாலும் தொலையும். கன்மம் சிவ புண்ணிய முதிர்ச்சியினல் பக்குவம் அடையும். உலகம் கடவுளிடத்திலிருந்து தோன்றவில்லை; மாயையினிடத்திலிருந்து தோன்றியது. அது உல

கத்திற்கு முதற்காரணம் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்று அது மூன்று வகைப்படும். மாயை சித்தல்ல, சடம். மாயை அழிவது அன்று; என்றும் உள்ளது. பருவுடல், நுண் உடல், காரண உடல் என உடல் மூன்று வகைப்படும். கலைகள் 5-ம் சுத்த மாயையி லிருந்து உண்டாயின. முக்குணங்கள் பிரகிருதியிலிருந்து தோன்றின. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற 4 வாக்குகள் சுத்த மாயையில் தோன்றின. காதினுல் கேட் கப்படும் ஒலி வைகரி. சிவ தத்துவம் சுத்த மாயையினின்று உண்டாயிற்று. வேதம் அதிலேதான் உண்டாயிற்று. ஆலம் வித்தில் மரம் சூக்குமமாய் அடங்கி நிற்றல்போல, மாயையில் உலகம் அடங்கி நிற்கின்றது. பூதாதி, வைகாரி கம், தைசதம் என்று அகங்காரம் 3 வகைப்படும். பூதங்கள் 5-ம், தன்மாத்திரைகளில் தோன்றின. அசுத்த மாயை என்பது பிரகிருதி முதல் பிருதுவிவரை; சுத்தாசுத்த மாயை வித்தியாதத்துவம் எழுமாம். சுத்தமாயை ஒலியாம். கல்விகற்று அதற்குத் தக ஒழுகுதலே முதல் சாதனம். இரண்டாம் சாதனம் தீக்கை. அஞ்ஞானத்தைக் குறைத்து ஞானத்தைக் கொடுப்பது தீக்கை. அது சமயப், விசேடம், நிர்வாணம் என்று மூன்றுவகை. மூன்றும் சாதனம், சரியை, கிரியை, யோகம் செய்தல். தீட்சை முத்தியைக் கொடாது ஞானத்தைக் கொடுக்கும். அப்படியே சரியை, கிரியை, யோகமும் ஞானத்தையே கொடுக்கும், வீடுபேற் றைக் கொடுக்காது. இறைவனின் உண்மைத் திருமேனிகள் குருலிங்க சங்கமங்கள். ஐந்தெழுத்து பிறவிப் பெருங்கடல் கடக்கும் தோணி எனலாம். புறப்பூசையினும் அகப்பூசை உயர்ந்தது. அந்தரியாக பூசையும் அதுவே. தியானத்தால் உயிரின் ஒளி அதிகரிக்கும். எல்லாம் சிவன் செயலெனக் காணுதல், குருவை உயர்ந்த இன்பநிலையாய்த் தியானித்தல், பெரியவரை வழிபடுதல், சிவன்செயல் இப்படியோ என்று பார்ப்பது, சிவ வேடம்பூண்ட அன்பர்களைக் காணுதல், சிவாலயத்தில் இறைவனைக் கண்டு வணங்கி அன்பு செலுத் துதல் முதலியன நிட்டையே. அதன்பயன் ஞானம். ஞானத்தால் வீடுபேறுமாம்.

அனுபவம் இல்லாத ஞானம் கனவிற்கு நேர். அனுப வத்தை வெளியில் சொல்வதில்லை-சொல்லக்கூடாது என்பது

மாபு. தற்போதம் அழிந்து, சிவபோதம் மேலிட்டால் அனுபவம் நிகழும். அனுபவத்தைச் சோதிக்கக் கூடாது. ஏனென்றால் இறைவனது சத்தி அளந்தறியக் கூடாததா யிருக்கிறது. அனுபவ வழியைக் குரு ஒருவனே காட்டுவான். அனுபவம் என்பது தன்னிடத்தில் காணும் சுகபோகம். இன்பம், முத்தி என்பது கட்டுகளினின்று விடுபடுதல். கடலை அடைந்த ஆறு திரும்பாததுபோல, முத்தி அடைந்த உயிர் திரும்பாது. கண்ணொளியும் கதிரொளியும் கலந்து நிற்பது போல், முத்தியில் உயிர் கடவுளோடு கலந்து நிற்கும். முத்திநெறி ஒன்றே. அது சிவனோடு ஐக்கியமுற்று இருத்தலாம்.

சிவஞானபோதத் தெளிபொருட் சுருக்கம்

பேராசிரியர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

(முற்றொடர்ச்சி: மலர்-29; இதழ்-7; பக்கம்-317)

மூன்றாம் சூத்திரம்

" உளது-இலது என்றலின் ; எனதுடல் என்றலின் ;
ஐம்புலன், ஒடுக்கம் அறிதலின் ; கண்படில்
உண்டி,வினை இன்மையின் ; உணர்த்த உணர்தலின் ;
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா !"

இம்மூன்றாம் சூத்திரம் இலது என்றல், எனதுடல் என்றல், ஐம்புலன் அறிதல், ஐம்புலன் ஒடுக்கம் அறிதல், கண்படில் உண்டியும் வினையும் இன்மை, உணர்த்த உணர்தல் என்னும் அறுவகை ஏதுக்களானும், " மாயா இந்திர தனு " எனும் பெயர் அடைமொழியாற் பெறப்படும் குறிப் பேதுவானும், இவைகள் எல்லாவற்றினும் வேறாக இவ் வுடம்பினுள் உயிர் எனப்படுவது ஒன்று உண்டு என்று அறிவுறுக்கும் பொருள் உடையதாகும்.

முதன்மை யுடைமைபற்றி உலகிற்கு நிமித்த காரண மாகிய பதிப்பொருள் உண்டு என்பது முதற் சூத்திரத்துட் கூறிக், காரணமாதற் பொதுமையான் இயைபுடைமை நோக்கித் துணைக் காரணங்களது உண்மையும் அவற்றன்

உலகம் காரியப்படுமாறும் இரண்டாம் சூத்திரத்துட் கூறி, அவற்றானுய பயன் கோடற்குரிய பசுக்களின் உண்மைக்குப் பிரமாணம் ஈண்டுக் கூறப் புகுகின்றார் என்பது முனிவரர் பெருமானின் குறிப்பு.

காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுளுண்மையினை அறிவுறுத்த வேண்டியிருத்தலின், முதற் சூத்திரத்தின்கண் 'தோற்றிய திதியே' எனவும், 'ஒடுங்கியுளதாம்' எனவும் உலகின்மேல் வைத்துக் கூறியவாறு போலக்-காணப்பட்ட உடம்பாற் காணப்படாத உயிருக்கு உண்மை கூறவேண்டுதலின், இவ்வுடம்பு சூனியம் முதலியவற்றின் வேறாய ஆன்மாவையுடையது என்னும் கருத்துப்பட, உடம்பின்மேல் வைத்து "மாயா இந்திர நுவிறுள் ஆன்மா உளது" என்று ஆசிரியர் ஓதியருளினர்.

உயிர் என்பது ஒன்றில்லை என்னும் சூனிய ஆன்மவாதி, உடலே உயிர் என்னும் தேக ஆன்மவாதி, ஐம்பொறிகளே உயிர் என்னும் இந்திரிய ஆன்மவாதி, அகக் கருவிகளே உயிர் என்னும் அந்தக்கரண ஆன்மவாதி, நுண்ணுடலே உயிர் என்னும் சூக்கும தேக ஆன்மவாதி, உயிர்ப்புக்காற்றே உயிர் என்னும் பிராண ஆன்மவாதி, பிரமப் பொருளே உயிர் என்னும் விஞ்ஞான ஆன்மவாதி, இவைகள் யாவும் கலந்த தொகுதியே உயிர் என்னும் சமுகான்மவாதி ஆகிய எண்மர் மதங்களும் ஈண்டு மறுக்கப்படுதற் குரியன. எனினும், உயிரின் இலக்கணம் கூறப்பெறும் நான்காம் சூத்திரத்தின் தொடக்கத்தில், அகக் கருவிகளே உயிராதல்வேண்டும் என்னும் அந்தக்கரணான்ம வாதிகளின் கூற்று மறுத்தொழிக்கப்பட இருத்தலின், அவரை ஒழித்து ஒழிந்த எழுவர் மதங்களை மட்டுமே ஈண்டுத் தனித்தனியே எடுத்து முறையாக மறுத்து, உயிருண்மையை ஆசிரியர் நிறுவுகின்றார். எனவே, இச்சூத்திரம் எழு அதிகரணங்களை உடையதாயிற்று.

அவற்றுள் "ஈண்டு இலது என்றலின் ஆன்மா உளது" என்பது சூனியான்ம வாதத்தை மறுத்தற்கு எழுந்தது. ஆன்மா இல்லை என்பதே பற்றி அஃதுண்டு எனக் கொள்ளுதல், முயற்கோடு இல்லை என்பது கொண்டு அஃதுண்டு என்று நிறுவப் புகுதல்போல முறையில் செயலாம் எனச் சிலர் நினைப்பர். "இலது என்றலின் ஆன்மா உளது" எனக்

கூறிய ஆசிரியர் கருதிய பொருள், அவர்கள் கருதுவதின் வேறுபட்ட தொன்றாகும். உயிர் என்ப தொன்றில்லை எனக் கூறும் நூனியான்மவாதிகள், அங்ஙனம் கூறுங்காலும் 'இல்லை' என வாளா கூறிவிடாது காரணம் காட்டியே கூற வேண்டுதலின், "நாடியோ? என்போ? நரம்புசிக் கோழையோ? தேடி எனை யறியேன்!" என்றாற்போல, உடல் பொறி முதலிய அனைத்தினும் முறையே ஆராய்ந்து, இஃது உயிரன்று இஃது உயிரன்று என ஒவ்வொன்றாகக் கழித்து, முடிவின்கண் இவ்வாறாகலான் உயிர் என்ப தொன்றில்லை எனத் துணிந்து மொழிவர். அவர்கள் அங்ஙனம் மொழிதற்கு ஏதுவாக, ஒவ்வொன்றினையும் உயிரன்று என ஆராய்ந்து கழிக்கும் அறிவு ஒன்று எஞ்சி நிற்றலின், "அன்று அன்று என நின்று அனைத்தும்விட்டு, அந்தெழுந் தாய் நின்று, ஒன்று உளது. அதுவே நீ" என்னும் வரிகளால், இலது இலது என்று கூறி ஒவ்வொன்றையும் உயிரன்று எனக் கழித்து நிற்கும் அவர்தம் அறிவே உயிர் என ஆசிரியர் தெளிவிக்கின்றார். அங்ஙனம் அறியும் அறிவும் சூனியமே எனின், அஃது 'என்னை ஈன்றாள் மலடி' என்பது போன்ற பொருந்தாக் கூற்றாகும். எனவே, இலது இலது என்று கூறிநிற்கும் அறிவாகிய ஆன்மா உளது எனத் தெளிவிக்கப்பெற்றது.

தேகான்மவாதிகள், மேற்கூறிய அவ்வறிவு உடம்பின் கண் அல்லது நிகழக் காணாமையானும், நான் பருத்தேன் இளைத்தேன் - கரியேன் - மனிதன்-பார்ப்பான் என உடம்பினையே நான் என்று வழங்கக் காண்டலானும், உடம்பே உயிர் என்பர். நான் இளைத்தேன் - பருத்தேன் - கரியேன்- மனிதன் - பார்ப்பான் என்பன முதலாக வழங்குங்கால் உடம்பின் குண விசேடங்களையே உபசாரத்தால அதனுடன் கலந்தியைந்துள்ள உயிருக்கு ஏற்றி வழங்குகின்றோம். அதுபற்றி உடம்பே உயிர் என்றல் பொருந்தாது. யான் உடம்பு, யான் கை, யான் கால் என உடம்பை யாரும் வழங்குவதில்லை. என்னுடம்பு என்கை என்கால் எனவே வழங்கக் காண்கின்றோம். என் ஊர் என்வீடு என்மனைவி என்பொருள் என்று கூறுங்கால், ஊரும் வீடும் மனைவியும் பொருளும் நம்மின் வேறாதல் போலவே, என்னுடம்பு என்கை என்கால் என்புழியும் உடம்பு கை கால்

முதலியன நம்மின் வேறாதல் பெறப்படும். எனவே, யான் என்று குறிப்பிடப் படுவதாகிய உயிரும், எனது எனக் குறிப்பிடப்படுவதாகிய கை கால் கண் செவி உடம்பு முதலிய பிறவும் வேறு வேறு என்பது புலனும். எனவே, உடம்பே உயிர் என்னும் கொள்கை பொருத்தமின்மை தெளியலாம். இதனையே "என்பநி என்மனை என்றாற்போல என் கை என் கால் என நிற்பது உளதாகலின், அதுவே அவ்வான்மாவாம்" என்னும் கருத்துப்பட "எனது உடல் என்றலின் ஆன்மா உளது" என்று ஆசிரியர் விளக்கினர்.

"உற்றதை உணரும் உடலுயிர் வாழ்வுழி
மற்றறைய உடம்பே மன்றுயிர் நீங்கிடில்
தடிந்தெரி யூட்டினும் தானுண ராதெனின்
உடம்பிடைப் போனதொன் றுண்டென உணர்நீ !"

எனச் சாதுவன் என்பான், நாகர் தலைவனுக்குக் கூறும் மணிமேகலைப் பகுதியும் ஈண்டு ஒப்புநோக்கி உணர்தற் குரியது.

இந்திரியான்ம வாதிகள், ஐம்பொறிகள் ஐம்புலன்களை அறியும் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையின், அவை உடல்போற் சடம் அன்மை பெறப்படுதலானும், அவற்றை 'எனது' என்னும் வழக்கம் பெரும்பான்மை யன்றாகலானும், ஐம்பொறிகளே உயிராதல் அமையும் என்பர். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தினையும், ஐம்பொறிகளுள் ஒன்றறிந்தது ஒன்றறியாது. நாக்கு சுவை யொன்றையுமே அறியும், ஒளியை அறியாது. கண் ஒளியை மட்டுமே அறியும், சுவையை அறியாது. செவி ஓசையைமட்டும் அறியும், நாற்றத்தினை அறியாது. இங் ஙனமே பிறவும். ஐம்பொறிகள் அவ்வவற்றிற்குரிய ஐம் புலன்களையும் அறியுமாயினும், இத்தொழிற்பாட்டை யுடை யேம் யாம் என்றறிய வல்லன வல்ல. எனவே, தனித் தனியே ஒவ்வொரு புலனைமட்டும் அறிகின்ற பொறிகள் ஐந்தி னும் வேறாக, கண் உருவத்தை யறிவது, செவி ஓசையை அறிவது என்றிவ்வாறு உணரவல்லதாய், அவ்வைம்பொறி களாலும் ஐந்து பயன்களையும் ஒருசேர நுகர்வ தொன் றுண்டு ! அதுவே உயிராகும் என்பது ஆசிரியர் கருத்து. இதனையே,

"ஒன்றறிந்தது ஒன்றறியா தாகி, உடல்மன்னி
அன்றும் புலன்ஆய் அவ்அஞ் செழுத்தை—ஒன்றுஅறிதல்
உள்ளதே யாகில், அதுநீ! தனித்தனிகண்டு
உள்ளல(அ)வை! ஒன்றல்லை ஓர்!"

என்னும் கருத்துப்பட "ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது" என்று ஆசிரியர் சுருக்கமாகக் குறிப்பிட்டார். "ஐம்புலனாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்தது ஒன்றறியாமையின், இவ்வைந்தினையும் ஐம்புலனும் அறிவது உளதாகலின், அதுவே அவ்வான்மாவாம்" என்னும் பொழிப்புரை இவ்வுண்மையை எளிமையாகவும் தெளிவாகவும் விரித்துரைத்தல் காணலாம்.

சூக்கும தேகான்ம வாதிகள், 'இந்திரியங்கள் உயிரல்லவாயினும், அவ்விந்திரியங்களின் வேறாய் அகத்தே நின்று அவற்றைப் புறத்தே செலுத்தி அறிவதாகிய புரியட்டகவுடம்பு எனப்படும் சூக்கும தேகமே உயிராகும் என்பர். சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் ஐந்தனோடு, மனம் புத்தி அகங்காரம் என்னும் மூன்றுமாகிய எட்டும் சேர்ந்தது புரியட்டகம் எனப்படும். புரியட்டகம், சூக்கும தேகம், நுண்ணுடல் என்பன ஒருபொருட் கிளவிகள். கனவின்கண் நிகழ்வனவற்றை அறிவது இச்சூக்கும தேகமேயாகும். எனவே இச்சூக்கும தேகமே உயிராகுமாயின், கனவின்கண் கண்டவற்றை நனவின்கண் மயங்காது அறிதல் வேண்டும். அவ்வாறின்மையின், நனவின்கண் தூலவுடம்பொடு கூடியும், கனவின்கண் சூக்குமவுடம்பொடு கூடியும் இயங்கி, அந்நிலை வேறுபாடுகளால் மயங்கி மயங்கி அறிந்தவரும் இயல்பிற்றாகிய பிறிதொருபொருள், சூக்கும தேகத்தின் வேறாக இருப்பது புலப்படும்.

"அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்,
செவ்விதின் அவ்வுடலிற் சென்றடங்கி,—அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டுஅதனை
மாறல்,உடல் நீஅல்லை மற்று!"

என்றபடி, சூக்கும தேகத்தின் வேறாகிய அப்பொருளே உயிர் எனப்படும். இவ்வுண்மையே "நனவின்கட் கனவு கண்டாம் என்றும், கண்டிலம் என்றும் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம்" என்னும் கருத்தமைய

"ஒடுங்காம் அறிதலின் ஆன்மா உளது" என ஆசிரியரால் விளக்கப்பட்டது.

பிராணான்மவாதிகள், சூக்கும தேகம் சொப்பனத்தான மாகிய கனவின்கண் மட்டுமே தொழிற்படுவது; ஆனல் பிராணவாயுவாகிய உயிர்ப்புக்காற்ருே, உறக்கம் பேருறக்கம் ஆகிய சுழுத்தி துரியங்களினும் தொழிற்படுவது; ஆதலால் பிராண வாயுவே உயிராம் என்பர். எல்லாக் கருவிகளோடும் கூடிய நிலையில் விழித்துக்கொண்டிருக்கும் போதும், எல்லாக் கருவிகளும் ஒடுங்கிய நிலையில் உறங்கிக் கொண்டிருக்கும்போதும் பிராணவாயு உடலில் ஒரு தன்மை யாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்ஙனமாகவும் விழித்திருக்குங்கால் உடம்பிற்குப் பொருள்களின் இடமாக வரும் இன்ப துன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் நிகழக் காண்கின்ருேம். ஆனல் துயின்றுகொண்டிருக்குங்கால் இன்ப துன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் உடம்பின்கண் நிகழக் காண்பதில்லை. இவ்வேறுபாட்டிற்குக் காரணம் என்னை? இதனை ஆழ்ந்து ஆராய்ந்தால், பிராணவாயு ஒரே தன்மைத்தாக இயங்கிக் கொண்டிருப்பினும், விழிப்பு நிலையில் உடம்புக்கு இன்ப துன்ப நுகர்ச்சியும் தொழிற்பாடும் நிகழுமாறு கருவிகளை யெல்லாம் கூட்டுவித்தும், உறக்க நிலையில் அவை நிகழாதவாறு கருவிகளையெல்லாம் ஒடுக்கு வித்தும் இயக்கிவரும் ஒரு பொருள், பிராணவாயுவின் வேருக உடம்பின்கண் நிற்றல் தெளியலாம்.

> "கண்டறியும் இவ்வுடலே காட்டுஒடுங்கக் காணுதே,
> உண்டி,வினை இன்றி, உயிர்த்தலால்,—கண்டறியும்
> உள்ளம்வேறு உண்டு!ஆய்! ஒடுங்காது உடல்கண்ணில்
> உள்ளதாம் உண்டிவினை ஊன்!"

இவ்விரிந்த கருத்தினையே "கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது" என ஆசிரியர் சூத்திரத்துட் சுருக்கமாகக் குறிப்பித்தார்!

விஞ்ஞானான்மவாதிகள், மேலே கூறிப்போந்த உடல் பொறி வளி முதலிய சடப்பொருள்களைப் போலன்றிப் பிரமப்பொருள் பேரறிவுடைய சித்துப்பொருளாகலான், அப்பிரமப்பொருளே உயிராகும் என்பர். கருவிகளின் துணையின்றி அறிய மாட்டாததாயும், கருவிகளோடு கூடி-

யறியுமிடத்தும் ஒருங்கே அறியமாட்டாது ஒரோவொன்றனையே அறிந்தும், ஒன்றனையறியப் புகுவதாயும், முன்னறிந்ததனைப் பின்னர் அறியாது மறந்தொழிந்தும், பலவாறு ஐந்தவத்தைப்பட்டுவரும் இயல்பினதாகிய உயிரைப் பேரறிவுடைய பிரமப்பொருளாகும் என்றல் பொருந்தாது. பிரமப்பொருள் எக்காலத்தும் திரிபின்றி அறிந்தாங்கு அறிந்து நிற்கும் சித்துப்பொருள். உயிரோ கருவிகளால் அறிவிக்க அறிந்து, மறந்து மறந்தறியும் இயல்பினதாகிய சித்தசித்துப்பொருள். எனவே, பிரமப்பொருளை உயிர் என்றல் பொருந்தாது. "உணர்ந்த உணர்வலின் ஆன்மா உளது" என்னும் ஆசிரியரின் திருமொழி இவ்வுண்மையினையே அறிவுறுத்துத் தெளிவுபடுத்துகின்றது.

சமுகான்மவாதிகள், உடல் பொறி வளி முதலியனவற்றுள் ஒவ்வொன்றையும் உயிரன்று என்றது அமையும்; அவற்றுள் ஒன்று குறைந்த வழியும் அறிவு நிகழாமையானும், எல்லாம் கூடியவழி அறிவு நிகழ்தலானும், அவையனைத்தும் கூடிய சமுதாயமே உயிராதல் கூடும் என்றுரைப்பர். ஆனல், அனைத்தும்கூடிய சமுதாயம் எனத்தகுந்த கலை முதல் நிலம் ஈருகிய தத்துவங்கள் யாவும், மாயையின் காரியங்களாய், வேறு வேறு பெயர்களைப் பெறுவனவாதலோடு, நிலைபெருது அழிந்துபடும் இயல்பினவுமாம். ஆதலின் அவை நிலைபேறுடைய உயிராகமாட்டா. அம்மாயா காரியத் தொகுதியானது, கண்ணுக்கு ஒளிகாட்டி உதவிசெய்யும் விளக்குப்போல, உயிர்க்குப் பருமை நுண்மை தூய்மை உடம்புகளாய்ப் பயன்படும். ஆதலால் கண்ணனது விளக்கினின்றும் வேருயினற்போல, உயிர் மாயாகாரியத் தொகுதியின்வேரும். எனவே, மாயாகாரியத் தொகுதியாய் அமைக்கப்பட்டு, வியத்தக்கதொரு சூத்திரப் பாவைபோல விளங்கும் உடம்பின்கண்ணே, அவற்றிற்கெல்லாம் வேருக அறிவுப்பொருளாகிய ஆன்மா என்பதொன்றுண்டு!

"கலைஆதி மண்அந்தம் காணில், அவைமாயை!
நிலையாவாம்! தீபமே போல,—அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில், அதுதனுவாம்!
தான்அத்தின் வேருகும் தான்!"

என்னும் இக்கருத்தே "மாயா யெந்திர தநுவினுள் ஆன்மா உளது" என ஆசிரியரால் விளக்கப்பட்டது.

"பாராதி பூதம்நீ அல்லை!—உன்னிப்
பார்! இந்திரியம் கரணம்நீ அல்லை!
ஆராய் உணர்வு நீ என்றான்!—ஐயன்
அன்பாய் உரைத்தசொல் ஆனந்தம் தோழி!"

என்று போதரும் தாயுமானவப் பெருமான் திருமொழி, இம் மூன்றும் சூத்திரத்தின்கண் விளக்கப்பட்ட பொருள்களை யெல்லாம், தன்பாற் பொதிந்து உள்ளடக்கிக்கொண்டு திகழ்தல் கண்டுணர்ந்து மகிழ்ந்தின்புறற்பாலது!

—முருகவேள்.

(தொடரும்)

அறத்தாற்றில் ஒரு காட்சி

ஆசிரியர்

மாரிக் காலம் மழையோ அடிக்க
ஏரிக் குளங்கள் எங்கும் வெள்ளம்
வாரிக் கொட்டும் வானம் துளைக்க
காரும் விடாமல் கசியும் இரவே. 1

மாட்டுத்தொழுவம் மத்தி இடையன்
வீட்டு வேலை விரும்பிச் செய்வான்,
காட்டுப் புறத்தே காட்சி ஒன்றைப்
பேட்டி கண்டான், பெரிதும் வியந்தான். 2

காவி உடையில் காண்இப் பெரியார்
ஆவி உலகில் ஆழ்ந்தார் என்கோ!
சேவிப் பின்றிச் சிறும் மழையில்
தாவி நிற்பார் தாழ்வா ரத்தே. 3

ஏனோ இங்ஙன் ஏழை மகன்போல்
வானோ சிற வானம் கொட்டத்
தானோ நிற்பார்? தவத்தின் பயன்தான்
ஈனா நிற்கும் இதையோ? நினைப்பான். 4

நெஞ்சில் நிகழ்ந்த நினைவைப் போலத்
தஞ்சம் அடைந்துத் தாழ்வா ரத்தில்
அஞ்சி ஒதுங்கும் அந்தத் துறவி
விஞ்சிக் கேட்க விரைவோ டிசைப்பான்:— 5

“ கால்நடைகள் தொழுவத்தில் கவலையின்றித் தூங்கும்,
தோல்நன்கு குளிர்நீங்கத் தொல்அடுப்பும் ஓங்கும்,
பால்நனியே ஊட்டிவரப் பாரியையும் வீட்டில்,
மேல்நமது குழவிகளும் மீதுறங்கும் கூட்டில்
ஆதலின் மழையே அடிப்பாய் மேன்மேல்.” 6

தாழ்வா ரத்தே தண்காற் கொதுங்கி
ஊழ்வாய் கடந்த உத்தம மூர்த்தி
எழ்வாய் நிலையும் இகழ்ந்த புந்நரே,
ஆழ்வார் அன்பில் அறைந்தார் விடையே:— 7

“ மனத்தகத்தை அடக்கிவிட்ட மாண்பதுவும் உண்டு,
கனத்தகத்தில் புலன்களெலாம் கைக்கொண்ட துண்டு,
இனத்தகத்தில் உள்ளமதோ ஏற்றமையும் உறுதி,
வனத்தகத்துள் வாய்த்ததெலாம் வளமையுறல் தகுதி,
ஆதலின் மழையே அடிப்பாய் மேன்மேல்.” 8

கேட்டான் இடையன் கேளிக் கூத்தென்
றேட்டால் விளைந்த இளைப்பென் றெண்ணிக்
காட்டா நின்றான் களிப்பில் மீண்டும்
மூட்டா நின்றான் முறுவல் காட்டி:— 9

“ வயல்களிலே அறுவடையும் வளமாகப் பெற்றேம்
அயல்களிலே வைக்கோலை அடுக்கடுக்காய் உற்றேம்,
கயல்களிலே பெருக்கெடுக்கும் காட்டாறும் ஓடும்,
செயல்களிலே பாதைகளும் செவ்வகையில் கூடும்.
ஆதலின் மழையே அடிப்பாய் மேன்மேல்.” 10

வெளியே நின்று விரும்பிக் கேட்டார்
அளியே நிறைந்த அன்பு மூர்த்தி;
களியே அமரக் காட்டாள் கேட்க
ஒளியே றன்ன உறுதி பகர்வார்:— 11

“ கன்மமெலாம் ஒடுங்கினவாய்க் கவின்நிலையும் உறுமே,
சன்மமெலாம் அமைதியிலே சால்புநிலை பெறுமே,
வன்மமிலாப் பரிபூர்ணம் உள்ளிருந்து பெருகும்,
தன்மமெலாம் உறுதிநிலை தடம் அமைந்தே உருகும்.
ஆதலின் மழையே அடிப்பாய் மேன்மேல் ” 12

இடையன் கேட்டான் இதயம் திறந்து
மடையில் நீர்போல் மல்கிற் றுளியே
அடையும் வாழ்வில் அகண்ட வாழ்வாய்
எடையில் துறவின் எழில்வாழ் வறிந்தான். 13

வந்தான் வெளியே வாள்வீழ் வெண்ணன்,
எந்தாய் அருள்வீர்! என்றே அவர்தாள்
நுந்தா விளக்காய் நோக்கி வீழ்ந்தான்;
தந்தார் சிடத் தகுதி அவற்கே. 14

——

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர்,

சிவபூசனை வல்லார்,

குடந்தை-ப. தி. சோ. குமாரசாமிச் செட்டியார்

(தோற்றம்: 25-12-1889. மறைவு: 29-6-1956)

மரபு: சிவநெறி திகழ்ந்தோங்கும் நம் தமிழ்நாட்டின் சோழ வளநாட்டிலும், தூய பரம்பரைச் சைவமரபு பல வுண்டு. அவற்றுள் சோழபுரம் செட்டியார் மரபும், பரம்பரை யாகவே மிகத் தொன்மையான மரபாகும். இம்மரபினர் பழைய காலமுதல் உத்தண்ட சாத்தனாரைத் தம் தலைவனாகக் கொண்ட வணிக மரபினர் ஆவார்.

இம்மரபினர் இக்காலம் தஞ்சை மாவட்டத்தில் பற்பல இடங்களில் பெரும்பாலோரும், திருச்சிராப்பள்ளி மாவட்டப் பகுதிகளில் சிற்சில இடத்தும், சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் பரம்பரையாகவே சிவநெறியில் நிலைத்தவர்களாக, முறையே சிவதீக்ஷைகள் முதலானவைகளைப்பெற்றுச் சிவபூசனை புரியும் ஆற்றல் உடையவராய்த் திகழ்ந்து வருகின்றனர். பயிர்ச்செலவுத் துறை, வணிகத்துறை, இவையே இவர்களது பரம்பரைத் தொழிலாகும்.

தமிழ் மொழியிலும் சிவசமயப் பயிற்சியிலும் இம்மரபினர் அவ்வக்காலங்களில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். இம்மரபே நமது செட்டியார் அவர்கள் மரபாகும்.

முன்னோரும் தோற்றமும்: தற்காலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்ததும் உடையார்பாளையம் வட்டத்திற் குட்பட்டதுமான தாதம்பேட்டைப் பழூர் எனும் ஊரே செட்டியார் அவர்களின் முன்னோர்கள் வாழ்ந்த ஊராகும். இன்றும் அன்னாரது நெருங்கிய உறவினர்கள் அவ்வூரில் மிகுதியாக உள்ளனர்.

இவ்வூரில் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த குமரப்ப செட்டியார் என்பவர் நமது செட்டியாரின் கொள்பாட்டனாராவர். இவர் மகனார் தியாகராச செட்டியார் என்பவர் காலந்தொட்டு இக்குடும்பத்தார்

வணிகத்துறையில் செவ்வையாக ஈடுபடும்பொருட்டுக் குடந்தை (கும்பகோணம்) வந்து தங்கி அக்காலம் அறுவை (சவுளி) வணிகம், பொன் வணிகம் இவைகளில் ஈடுபடலாயினர். தியாகராசச் செட்டியார் மகனார் சோமசுந்தரம் செட்டியார் ஆவார். இவரே செட்டியார் அவர்களின் தந்தையார். இவர் தன் இறுதிக்காலம்வரை பொன் வணிகத்தில் கண்ணுங் கருத்துமாக ஈடுபட்டு மிகவும் அடக்கமாக எல்லாவகையிலும் எளிமையாக வாழ்ந்துவந்தார். இவருக்கு நான்கு புதல்வர்களும் ஒரு புதல்வியும் உண்டு. இந்நால்வருள் மூத்தமகனாரகிய நமது ப. தி. சோ. குமாரசாமி செட்டியார் அவர்கள் விரோதி ஆண்டு மார்கழித் திங்கள் 12-ம் திகதிக்குச் சரியான ஆங்கிலம் 1889-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் திகதி புதன்கிழமையில் இம் மண்ணுலகிற் பிறந்தார்கள்.

இளமைக் காலமும் கல்வியும் : நமது செட்டியார் அவர்களின் குடும்பத்தார் அக்காலம் முதல் கும்பகோணம் செட்டிப் புதுத்தெருவில் வசித்து வருகின்றனர். இவர் இளமைக்காலம் ஒரு பழைய முறையைத் தழுவியிருந்தது. எக்காரணம் பற்றியும் பெரியோர்கள் அனுமதியின்றி வீட்டிற்கு வெளியே செல்லாத காலம். பெரியோர்களிடத்து மரியாதையும், பயமும் இருந்தகாலம். ஆடம்பர வாழ்வு இல்லாத காலம்; சுருங்கக் கூறவேண்டுமானல் காப்பி இல்லாத பழையமுது உண்ணும் காலம்; சட்டை போடாத காலம். இவ்வழக்கங்களில் செட்டியார் அவர்களின் குடும்பத்தாரை இன்றும் காணலாம்.

செட்டியார் அவர்கள் தாங்கள் இருந்த செட்டிப் புதுத்தெருவில் அக்காலம் திண்ணைப்பள்ளி வைத்திருந்த முத்துக்குமார வாத்தியார் அவர்களிடம் தொடக்கக் கல்வி பயின்று; பின்னர் இராமசாமி ஐயர் பள்ளியிற் சேர்ந்து பயின்று, அதன் பிறகு இப்பொழுதும் உள்ள பழைய நேடிவ் உயர்நிலைப் பள்ளியில் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்துத் தேறினார்கள். ஆயினும் தமிழ் மொழியிலும், இன்றியமையாத சமயப் பயிற்சியிலும் நன்கு பயில மிக்க ஆர்வம் இருந்ததால், வாய்ப்பு நேருங்கால் பல கல்விமான்களை யடுத்துத் தமிழையும் சமயத்தையும் கற்றுக்கொள்ள முற்பட்டு வந்தார்கள். இவை யாவும் பெரியோர்களுடைய

வேலைக்கு இடையூறின்றிக் காலா காலத்தில் வீட்டில் இருப்பது மாறாமல், தொழில்துறையில் குறைவாக நடப்பது போன்ற கருத்துகள் பெரியோர்களுக்கு ஏற்படாமல் நடந்தது என்றே கூறவேண்டும். அக்காலத்து (மதுரை)த் தமிழ்ச்சங்கத்துப் பாலபண்டிதப் பட்டத்தேர்விலும்தேர்ச்சி பெற்றார்கள்.

தொழில் : செட்டியார் அவர்கள், தன் தந்தையார் செவ்வையாகவும் அடக்கமாகவும் நடத்திவந்த பொன் வணிகத்துறை (காசுக்கடை) யில் தானும் தன் தம்பிமார்கள் மூவரும் உள்பட ஒன்றுபட்டுத் தந்தையாருடன் இருந்தே நன்கு தேர்ச்சிபெற்று வந்தார்கள். அக்காலம் இக்குடும்பத்தில் இவர்களது தோற்றம் காணுவோர் கண்ணுக்கு எல்லோரும் சகோதரர்கள் (தந்தையும் புதல்வர்களும்) போலவே இருந்துவரும்.

தனக்குத் தக்க வயதுவந்த காலத்துங்கூடத் தந்தைக்கு அடங்கித் தொழிலில் நன்கு தேர்ச்சிபெற்றுத் திறமைசாலியாக விளங்கிய செட்டியார், சோழநாட்டில் தில்லையாளியில் வாழ்ந்த பழைய காசுக் கடைக்காரரான அருணாசலக் கவிராயர் போன்று (கடையில்) தொழிலில் ஈடுபட்டுக் கொண்டே அந்நேரங்களில் தனது கையில் எதாவது ஒரு தமிழ் நூலை வைத்துப் படித்துக்கொண்டு இருப்பது வழக்கம். இவர்களது கடைக்குப் பக்கத்துக் கடைக்காரரும் ஒருசாலை மாணாக்கரும் உறவினருமான கொ. சொ. பொ. கோடிலிங்கம் செட்டியாரும் இத்தகையவரேயாம். இவ்விருவருமே அக்காலம் காசுக்கடைத் தொழிலில் நன்கு ஈடுபட்டும் கடையிலேயே தமிழ்பற்றியும் சமயம் பற்றியும் அடிக்கடி படித்து அளவளாவிய பெரியோராவர்.

செட்டியார் அவர்கள் படித்துவருவதில் எத்துணை ஈடுபாடுற்றபோதிலும் எதேனும் வணிகம்வந்தால் உடனே படிப்பை நிறுத்தி வணிகத்தைக் கவனித்துப் பின்னர் படித்துவருவாராம். இதனால் இவர் பெரியோரிடத்துத் தனக்கு நல்ல மதிப்பு இருக்குமாறும் செய்துகொண்டார்.

பழகிய பெரியோர்கள் : நமது செட்டியார் அவர்கள் தன் தொழிலிலும் படிப்பிலும் கண்ணுங் கருத்துமாக இருந்ததன்றி அக்காலத்துச் சிறப்பாக இருந்த பல தமிழா

சிரியர்களிடம் நன்கு பழகி அதன்மூலமும் தனது கல்விச் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். அன்றியும், சோழ நாட்டில் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்துவந்த மகாவித்துவான் திரிசிரபுரம் திரு. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர்கள் பலரிடத்தும் நன்கு பழகி வந்துள்ளார்கள். அத்தகையோருள் அக்காலம் குடந்தையில் வாழ்ந்த பட்டவிருத்தி சபாபதி செட்டியார் ஒருவர். அருணாசல வாத்தியார், ம. வீ. இராமானுசாச்சாரியார் போன்றவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள்.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களிடம் செட்டியார் அவர்களுக்கு நல்ல பழக்கம் உண்டு. சென்னை செல்லும்போதெல்லாம் ஐயர் அவர்களைக் காணாது திரும்பவேமாட்டார்கள். ஐயர் அவர்களிடம் பயின்ற குடந்தை தியாகராஜ தேசிகரிடம் நம் செட்டியார் அவர்களும், கொ. சொ. பொ. கோடிலிங்கம் செட்டியார் என்பவருமே சமயமும் தமிழும் நன்கு பயின்றார்கள்.

பின்னர் சூரியனார் கோயில் ஆதீனம் கந்த பரம்பரை முத்துக்குமார தேசிக மகா சந்நிதானம் அவர்களிடமும், இலக்கணம் முத்துக்குமரசாமித் தம்பிரான் அவர்களிடமும் அவ்வக்காலங்களில் நன்கு பழகிப் பற்பல உண்மைகளை நல்ல முறையில் அறிந்துள்ளார்கள். வரத நஞ்சையப்பிள்ளை, கந்தசாமிப்பிள்ளை இவர்கள் பழக்கம் நிரம்ப உண்டு. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள், மறைமலை அடிகள் போன்ற பெரியவர்களின் சொற்பொழிவு எங்கு நடந்தாலும் சென்று கேட்டுக் குறிப்பு எடுப்பது செட்டியார் அவர்களுக்குச் சோம்பல் இல்லாத செய்கையாகும். தஞ்சையில் வதிந்த உமாமகேசுரம் பிள்ளை, ஐ. குமாரசாமிப் பிள்ளை போன்றாரிடத்தும் நன்கு பழகிவந்த பெருமை செட்டியார் அவர்களுக்கு உண்டு.

செட்டியார் அவர்கள் தன் இறுதிக்காலத்தில் பழனி ஈசான சிவாச்சாரியார் அவர்கள், மாம்பாக்கம் இளவழகனார், அமிர்தலிங்கம் பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார், ஆடூர்க் கணபதிப்பிள்ளை போன்றாரிடத்து மிகப் பெரிதும் ஈடுபாடு உடையவராக இருந்தார்கள். சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம், சச்சிதானந்தம் பிள்ளை, ம. பாலசுப்பிரமணிய

முதலியார், கோவை சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களிடமெல்லாம் செட்டியார் அவர்கள் வைத்திருந்த மதிப்பிற்கு அளவேயில்லை. லாலுகுடி சரவண முதலியார் அவர்களிடத்துத் தனி மதிப்பு உண்டு.

யார் பேசினாலும் குறிப்பு எடுக்கும் வழக்கம் செட்டியார் அவர்களுக்கு இறுதிக்காலம் வரை இருந்தது. இத்தகைய செட்டியார் அவர்களிடம் இருந்த செல்வங்கள் யாவும் பிறர் அறியாவண்ணம் பல ஆண்டுகள் சென்றன.

திருக்கூட்டத் தலைவர் : எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாம் சிவபெருமான் திருவருட்டுணையால் 1948 ஜனவரி தொடக்கத்தில் திருவலஞ்சுழி, வெள்ளை விநாயகர் திருமுன் குடந்தைச் சைவப் பெருமக்களால் ஏற்படுத்தப்பட்ட " திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்கு; இயற்கையாகவே நமது செட்டியார் அவர்கள் தலைவர் ஆனார்கள். உடனே நாடெங்கும் செட்டியார் அவர்களின் சமயப்பற்றும் புலமையும் ஆற்றலும் பரவத்தொடங்கிக் கூட்டத்தின் பெருமை வளரத் தொடங்கியது.

பற்று : திருமிகு செட்டியார் அவர்களுக்கு எத்துறையிலும் பொருளில் பற்று நிரம்ப உண்டு. செல்வப்பொருள் சொற்பொருள் எல்லாவற்றிலுமே அழுத்தமாகக் காணப்படுவார். . ஆயினும் சிறப்பான சைவ சமயப்பற்றும் தமிழ் மொழிப்பற்றும் செட்டியார் அவர்களுக்கு இறுதிக்காலத்தில் ஆவிபோன்றிருந்தது. மொழியறிவும் சமயப்பற்றும் அளிக்கக்கூடிய நூல்களிடத்தில் (புத்தகங்கள்)பற்று அளவு கடந்திருந்தது.

தான் முதன்முதல் வரவழைத்த மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ் எனும் பத்திரிகையோடு எத்துணையோ மாத இதழும், வார இதழும், அவ்வப்போது தனது பெரியோர்களுக்கு அஞ்சியும் அஞ்சாதும் வாங்கிய பழந்தமிழ் நூல்கள் பலவும், தான் பிற்காலத்தில் நன்கு அறிந்து சுயேச்சையாகத் தாராளமாக வாங்கிச் சேர்த்து வைத்திருக்கும் மூவாயிரம் புத்தகங்களில் செட்டியார் அவர்களுக்கு எவ்வளவோ பற்று உண்டு.

இன்றியமையாத புத்தகங்கள் எதுவாயினும் செட்டியார் அவர்களிடம் இரண்டுக்குமேல் இருக்கும். ஒரே நூல்

எத்துணை பதிப்பு வெளிவந்து இருந்தாலும் எல்லாப் பதிப்பும் அவரிடம் இருக்கும். எந்த நூலையும் தான் நன்கு படித்துக் குறிப்புவைத்து இருப்பதோடு தன்னிடத்தில் இல்லாத நூல்கள் வேறு எங்கெங்கு இருக்கின்றது என்பதையும் நினைவுவைத்து அதனைத் தேடி வருவோருக்கு இன்ன இடத்தில் இருக்கின்றது எனக் கூறுவார். இதனால் மொழியின் அடிப்படையாகச் சிவசமயப்பற்றே செட்டியார் அவர்களுக்கு மிகுதி எனலாம்.

நுண் நலன்கள் : செட்டியார் அவர்கள் தனது மரபிற்கேற்றவாறு சமய தீக்கைகளைப்பெற்று விசேட, நிர்வாண தீக்கைகளையும் பெற்றுத் திகழ்ந்தார். சிவபூசையின் நுட்பங்களைத் தெளிவாக உணர்ந்து பிறருக்கு அதனைப் பகுதி பகுதியாக விளக்குவார். இதனால் அவர் சிவபூசாதுரந்தார் எனப்பட்டார்.

பழைய பழக்கம் நிரம்ப உடையவராதலால் பழைய நூல்களின் பொருள்களை நன்கு விளங்கும் முறையில் பிறருக்குக் கூறுவார். நல்ல உயரமும் சற்றுப் பருத்த உடலோடும் இருந்த செட்டியார் அவர்கள், திருநீற்றை நிறைய முறைப்படி பூசி அப்பர் அடிகள் போன்று விளங்குவார். யார் வந்தாலும் எழுந்து வரவேற்றுப் பேசிச் சோம்பல் இல்லாது செயல்முறையில் ஈடுபடுவார்.

எந்தக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினாலும், பேச்சாளர்கள் எக்கருத்தினராய் இருந்தபோதிலும், அவர்கள் பேசியதின் உட்கிடையை நன்கு தெளிவுபடுத்திவிடுவார். எங்கு பேசினாலும் சமயப் பற்றிலிருந்து வழுவாதவராய்ப் பழமையில் உள்ள தவறுகளைத் திருத்திப் புதிய ஆய்வு முறையில் உள்ள உண்மைகளைத் தானும் அறிந்து பிறருக்கும் கூறிவருவார்.

தொண்டு : செட்டியார் அவர்கள் ஒல்லும் வகையெல்லாம் பிறர் அறியாவண்ணம் பல ஏழை மாணவர்களுக்குப் பணவுதவியும் நூலுதவியும் நிரம்பச் செய்துள்ளார்கள். பல புலவர்களுக்கும் சமயச் சார்புடைய பலருக்கும் நிரம்ப உதவியாய் நின்று தாங்கினார்கள். சிவனடியார் திருக்கூட்டத்தினைத் தனக்கே உரிய பொறுமையில் நின்று செலுத்திச் சிவநேசபதியாகத் திகழ்ந்தார்கள். தமிழ்நாட்டுச்

சைவ மடங்களின் தொடர்பும் அந்தந்தமடங்களின் வழக்கு முறையும் நன்கறிந்த செட்டியார் அவர்கள், மடங்களின் தொடர்பினைச் சமய அடிப்படை முறையில் பெருகக் கொண்டு விளங்கினார்கள்.

எவரேனும் பொரிசு நாடி இவரிடம்வந்தால் உடனே ஆவன செய்த பின்னரே தனது அலுவலில் ஈடுபடுவது இவரது வழக்கங்களில் ஒன்று. திருப்பூந்துருத்தி அப்பர் மடத் திருப்பணித் தலைவராகவும் இருந்து பல ஆக்க வேலைக்கு அடிகோலிவந்தார். அடியார்கள் குடந்தைக்குக் கூட்டமாக வந்தால் புகலிடம் நமது செட்டியார் அவர்கள் இல்லமே.

திருக்கூட்டத் தலைவர் ஆன பின்னர் குறடாச்சேரி வாலையானந்தசுவாமிகள் இயற்றிய எறிபத்த நாயனார் புராண மெய்ப்பொருள் விளக்கம் எனும் நூலைத் தனது மனைவியின் செலவில் அச்சிட்டார்கள்.

அண்மையில் சென்ற ஆண்டில் தனது இல்லத்திலேயே ஆடவல்ல பெருமானையும் அம்மை சிவகாமியோடு திரு. ஈசான சிவாச்சாரியார் அவர்களைக்கொண்டு முறைப்படி கடவுள் மங்கலம் செய்துவைத்துத் தனது தம்பியாரையும் சிவபூசனை புரியச்செய்தார்கள்.

இவ்வாண்டு (1956) பிப்ரவரியில் நடந்த மகாமக விழாவில் குடந்தைப் புராணம் கும்பேசர் கோயிலில் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

இறுதியாக ஆதி கும்பேசருக்குச் செய்த ஐந்தலை நாகாபரணத்திற்குத் தங்கமுலாம்பூசிக்கொடுத்து வெள்ளிக் கிழமைதோறும் அடியார்கள் கும்பநாதனை நாகாபரணனாகக் காணச் செய்தார்கள். இன்னும் பல தொண்டினைச் செய்துள்ளார்கள்.

பன்னாள் பழகிய பெரியோர்களின் பெருமையையும் தனது சமயப் பற்றினையும் தமிழறிவினையும் இன்னும் பல அடிப்படையான தொண்டினையும் செட்டியார் அவர்கள் சிவனடியார் திருக்கூட்டத்தின்மூலம் நன்கு உலகுக்குக் காட்டினார்கள்.

இறுதி : இங்ஙனம் சிவ சேனாபதியாகவும் சிவபூசா துரந்தரராகவும் சிவசமயச் செல்வராகவும் திகழ்ந்த செட்டி

யார் அவர்கள் நிகழும் துன்முகியாண்டு ஆனித் திங்கள் பதினைந்தாம் நாள் (29-6-1956) வெள்ளிக்கிழமை சதய ஓரையில் இறைவன் திருவடிப் பேற்றினை அடைந்தார்கள். சதய ஓரை அப்பர் அடைந்த திருநாளை நினைவுறுத்தியது. தனித்த முறையில் செட்டியார் அவர்கள் சிவநெறி பரப்பி வாழ்ந்து மறைவுற்றதால் வருந்திய சிவநேயச் செல்வர்கள் தமிழ்நாட்டில் பலர் உண்டு. செட்டியார்போன்ற தனித்த சமயப்பற்றுடைய செல்வரைச் சோணாடு அண்மையில் எங்கு காணுவோம் என ஏங்குகிறது. ஏனெனில் செட்டியார் அவர்கள் பலருக்கு ஞானகுருவாக விளங்கிவந்தார்கள்.

தில்லைத் திருமுறைக் கழகம், செட்டியார் அவர்களைப் பல முறையில் பயன்படுத்திக் கொண்டது.

ஆகவே, ஆடவல்ல பெருமான் திருவருளாலும், செட்டியார் அவர்களின் பற்றுக்கோடாகிய திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரின் சீரிய வருங்காலத் தொண்டினாலும், அன்னாரது தம்பியார் ப. தி. சோ. சிங்காரஞ் செட்டியார் அவர்கள் தன் தமையனாராகிய செட்டியார் அவர்களைத் தன் தந்தைபோன்று பாவித்து அவர் அடிச்சுவட்டினைப் பின்பற்றித் திருக்கூட்டத்திற்கும் சிவநேயச் செல்வர்க்கும் சைவ சமயத்திற்கும் ஆவனசெய்ய முற்படுவதாலும், தமிழ்நாட்டுச் சைவப் பெருமக்கள் செட்டியார் அவர்களிடத்துக் கொண்ட நன் மதிப்பாலும், நாட்டில் ஆங்காங்குள்ள நம் சமாஜம்போன்ற சிவநெறிக் கழகங்களின் ஆழ்ந்த அனுதாப அன்பினாலும், திருமிகு செட்டியார் அவர்களின் ஆன்மா ஆடவல்ல பெருமானது திருவடி நிழலில் தங்கி என்றும் "இன்பம் பெருகும் இயல்பினால், ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட, மன்றுளாரடியாரவர் வான்புகழ்நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்" என அமைதிபெற்று நிலவுவதாகுக.

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர்

சித்தாந்தக் கட்டளை*

பதி பசு பாசம் மூன்றும் அனாதி நித்தம். இவை சமமாமோ? †வியாபக வியாத்தி வியாப்பிய இலக்கணம் பெற்றிருத்தலின் ஆகா.

‡பதியியல்பு : பதி : ஏகன், நித்தன், நின்மலன், அசலன், அகண்டிதன், ஆநந்த வுருவன், ஆதியந்த மில்லான், அளவிடற்கரியன், அருவம் உருவம் அருவுருவமென்னு முக்கூற்று ளின்னனவ னென்றும், அம் முக்கூறும் படும் விருத்தி, பரிணமம், விவர்த்தன மென்பவற்றுள் ஒன்றிற்படுவன் படானென்றுங் கூறுதற்கோ ராசங்கையு மில்லான்.

ஞாயிறென்றுதானே விடயங்களை விளக்குழிக் கதிரெனவும், தன்னை விளக்குழிக் கதிரோனெனவும், தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்றல்போல, பேரறிவாய சைதன்னியமாகிய சிவமொன்றே, அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையிற் சத்தி யெனவும், புறப்பொருளை நோக்கா தறிவுமாத்திரையாய் நிற்கும் நிலையிற் சத்தனெனவும், சமவாயத்தா லிருதிறப்பட் டியைந்து நிற்கும்.

தீயின் சத்தி யொன்றேயிருந்தும் உலோகம், விறகு, உப்பு, சாதனம் முதலான விஷய பேதங்களினால் உருக்குஞ் சத்தி, கொளுத்துஞ் சத்தி, வெடிக்குஞ் சத்தி, சமைக்குஞ் சத்தி யென்றற் றொடக்கத்துப் பல்வேறு வகைப்படுமாறு போல, சிவசத்தி யொன்றே காரிய வேறுபாட்டால் பல்வகைப் பெயர்பெற்று நிற்கும். அவ்வச் சத்திகளோடு

---

*1898-ம் ஆண்டு ரிப்பன் அச்சகப் பதிப்பு ஒப்பு நோக்கப் பட்டது.—தி. கி. நா.

†வியாபகம்=நிறைவு. வியாத்தி=சமநிறைவு. வியாப்பியம்=ஒன்றிலேயொன் றடங்கிநின்ற நிறைவு. கடல்=வியாபகம். நீரு முப்புங் கலந்திருத்தல்=வியாத்தி. கடலில் நீரு முப்பு மடங்கியிருத்தல்=வியாப்பியம்.

‡பா=காத்தல். தி=வினைமுதற் பொருள் விகுதி. பதி=காக்கிறவன்.

புணர்ந்த சிவமும் அவ்வாறு பல்வகைப் பெயர் பெற்று விளங்கும்.

சத்தியின் சொரூபம் ஞானம் ; அது பராசத்தி யெனப்படும். இச் சத்தி பசுக்கட்கு ஐந்தொழில் செய்வித்தற் பொருட்டுச் சிறப்பு வகையானே வியாபரிக்குங்காலொரு கூற்றானே திரோதான சத்தியென நின்று, இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி என முத்திறப்படும்.

யாண்டு மொருபெற்றித்தாய் வியாபரிக்கு மிச்சையை யொழித்து ஒழிந்த ஞானங் கிரியைக ளிரண்டுந் தனித்தனி வியாபரித்தலானும், ஒத்து வியாபரித்தலானும், தம்முட் குறைந்தும் ஏறியும் வியாபரித்தலானும், சிவம், சத்தி, சதா சிவம், மகேச்சுரம், சுத்தவித்தை யென்று ஐவகைப்பட்டு நிற்ப ; இலயன், போகன் அதிகாரனென மூவகைப்படப் பதிப்பொருள் ஒருவனே அவற்றை யதிட்டித்து, அவ்வப் பெயர் பெற்று நிற்பன்.

படிகமானது பொன்மை நீல முதலான பஞ்சவர்ணங் களுந் தன்னிடத்துப் பொருந்தினபோது தன்னிறத்தைக் காட்டாது அவற்றி னிறமாய் நிற்பதுபோல, பதி குண ரூபமா யுடனிற்குந் தனது சத்தியிற் காணப்படு மப்பேத மெல்லாந் தானாகத் தோன்றி வேற்றுமையின்றி நிற்பன். இதுபற்றித் தன்றன்மை வேறுபடான்.

நிமித்த காரணனாகிய பதி : முதற் காரணமாகிய மாயையினின்றும், துணைக் காரணமாகிய தனது சத்தியாற் பிரபஞ்சத்தைச் சிருட்டித்தும், திதித்தும் சங்கரித்துந் தான் தாக்கற்று நிர்விகாரியா யிருப்பன். அது ஆதித்தன் சந்நிதானத்துத் தாமரை மலர்ந்தும், காந்தம் அனலைக் கக்கியும், சலம் வற்றியும் வருவனபோலும்.

*பசுவியல்பு : ஆன்மாக்கள் இலக்கத்தினை லளவு படுதற் கரியராய், ஒரு காலத்தினும் அழியாதவராய், அஞ் ஞானமாகிய ஆணவமலத்தின் மறைப்புண்டு கிடந்து, தத் தமக் குண்டான புண்ணிய பாவங்களுக் கீடானதோ ருடலினைக் கடவுளின் காருண்யத்தினாலே பொருந்தி, அவனவ

---

* பசு=ஆன்மா ; பாச சம்பந்தம் பெற்றிருத்தலால் பசு. பச்=பந்தித்தல், உ=செயப்படுபொருள் விகுதி.

ளதுவாகிய வுடம்பெனத் தானென்னத் தோன்றாமற் பிரி
வற்று நின்று, அவ்வுடம்போடு கூடுகையி லெண்ணிறந்த
போகங்களை முயற்சியாற் புசித்து, அந்தந்தப் புசிப்பா லுண்
டாகிய இதாகிதங்களினாலே மீளவும் புண்ணிய பாவங்களை
யார்ச்சித்துக்கொண்டு அவற்றாலிறந்து பிறந்துவருவர். இத்
தகையோர் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என
மூவகைப்பட்டிருப்பர்.

* **விஞ்ஞானகலர் :** அட்டவித்தியேசுரர், அனுசதாசிவர்,
சத்தகோடி மகாமந்திரரென மூவகையர். இவர்கள் முறையே
மகேசுர தத்துவத்திலும், சாதாக்கிய தத்துவத்திலும், சுத்த
வித்தியா தத்துவத்திலு மிருப்பர். இவர்கள் ஆணவமல
மொன்றினை யுடையவர்கள். இவர்கட்குத் தனு கரண
புவன போகஞ் சுத்த மாயையாம். இவர்களில் பக்குவர்க்
குப் பதி அறிவிலே தன்மை மாத்திரையாய் நின்று திரு
வருளை யுதிப்பித்து மலத்தைப் போக்கி யிரட்சிப்பன்.

† **பிரளயாகலர் :** நூற்றுப் பதினெட்டு உருத்திரர்க
ளாவர். இவர்கள் ஆணவம் கன்மமென்னும் இரண்டு
மலத்தை யுடையவர்கள். இவர்கட்குத் தனு கரண புவன
போகம் அசுத்த மாயையாம். இவர்களில் பக்குவர்க்குப் பதி :
மான் மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்திர தாரியாகச்
சுபாவ அருட் டிருமேனிகொண் டெழுந்தருளி முன்னிலை
மாத்திரையாய் நின்று மலத்தைப் போக்கி யிரட்சிப்பன.

‡ **சகலர் :** பிரம விஷ்ணு முதல் பிபீலிகையீறாக இருப்
பவர்கள்; இவர்கள் ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்
மலமு முடையவர்கள்; இவர்கட்குப் பரசரீர மூன்று, சூக்
கும சரீரமொன்று, தூல சரீரமொன்று. அவை வருமாறு:-

அசுத்த மாயையில் அநந்த தேவராற் கலக்குண்ட பாக
மாகிய காரண சரீரமென்னும் பரசரீர மொன்று; இது

---

* விஞ்ஞானமென்னும் பிரபோதத்தாற் கட்டுப்பட்டிருக்கிறபடி
யால் விஞ்ஞானகல ரென்னப்படுவர்.

† பிரளயத்தில் மாயா தத்துவத்திற் கட்டுப்பட்டிருக்கிறபடி
யால் பிரளயாகல ரெனப்படுவர்.

‡ கலாதிகளினால் முற்றுங் கட்டுப்படுகிறபடியால் சகல ரெனப்
படுவர்.

ஆநந்தமயகோச மென்னப்படும். வித்தியா தத்துவங்களாகிய பஞ்சகஞ்சுக மென்னுஞ் சரீரமொன்று ; இது விஞ்ஞானமய கோச மெனப்படும். பஞ்சகஞ்சுகத்தி லொன்றாகிய கலையிற் றோன்றிய அவியந்தவியந்த ரூபமாகிய குணசரீர மென்னும் பாரசரீரமொன்று ; இது மனோமயகோச மெனப்படும். மனம், புத்தி, அகங்காரம் தன்மாத்திரை யைந்துமாகிய சமூகஞ் சூக்கும சரீரம் ; இது புரியட்டக மெனவும், பிராணமயகோச மெனவும் படும். ஏனையது தூலசரீரம் : இது அன்னமயகோச மென்னப்படும். இவ்வாறு புருடனொருவனே ஐந்து சரீரங்களோடுங் கூடி வினைக்கீடாகப் பிறப்பு இறப்படைவன்.

இவர்கட்குத் தூலதனு அண்டசம், சுவேதசம், உத்பிசம், சராயுசம் என்கிற நால்வகைத் தோற்றத்தில், சுரர்: 11 லட்சம், நரர் : 9 லட்சம், மிருகம் : 10 லட்சம், தாவரம் : 19 லட்சம், பறவை : 10 லட்சம், நீர்வாழ்வன : 10 லட்சம், ஊர்வன : 15 லட்சம் ஆகிய எழுவகைப்பிறப்பும், 84 லட்ச யோனிபேதமாம். இவை யாவும் பிரகிருதியில். இவருள் பக்குவருக்கு *இருவினை யொப்பு மலபரிபாக முண்டாகச் சத்திநிபாதம் விளைந்தவழி மானைக் காட்டி மானைப் பிடிப்பது போலக் கடவுள் மானிடச்சட்டை சாத்திக்கொண்டு குருமூர்த்தமா யெழுந்தருளி மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதர மறிந்து சமயதீட்சை பண்ணி, சரியை யனுட்டிப்பித்து, விசேட தீட்சைசெய்து கிரியா யோகங்களை அனுட்டிப்பித்து, நிருவாண தீட்சை புரிந்து ஞானமனுக்கிரகித்து, மும்மலங்களை நீக்க, ஆன்மாக்கள் அழிந்தார்களுமில்லையாய், அந்தச் சிவமுதலானார்களு மில்லையாய், சிவமுதலின்றிக் காரியப்பட்டார்களு மில்லையாய், அம் முதலுக்கு வேறாயிருந்தார்களு மில்லையாய், கேவலவிசிட்ட மறுதலை யத்துவிதங்களைக் கடந்து, அப் பதியோடு சுத்தாத்துவித நிலையினை யடைவர்.

---

* இருவினையொப்பு=நல்வினையிலுந் தீவினையிலும் விருப்பு வெறுப்பின்றிக் காண்டல். மலபரிபாகம் : மலம் = ஆணவமலம்; பரி=உபசர்க்கம் ; பாகம்=திரிவுகெடுதல் ; ஆன்மாவிற்குப் பக்குவம் வந்தவிடத்து மலசத்தி ஆன்ம ஞானத்தை மறையாதிருத்தல். சத்திநிபாதம் : சத்தி=சிவசத்தி ; நி=உபசர்க்கம் ; பாதம்=பதிதல் ; மலம் நீங்கியவழி சிவசத்தி பதிதல்.

* பாசவியல்பு: பாசம் ஐந்து வகைப்படும். அவை யாவன:—

அறியாமை மிகவுண்டாம்படி ஆன்மாக்கடோறுஞ் சகசமா யனாதியாயிருக்கும் ஆணவமலம் ஒன்று. இந்தஆணவ மலத்தோடுங் கூடிநின்று அது பக்குவமாமளவும் ஆன் மாவை மறைத்து அந்த மலத்தைப் பாகம் வருவிக்கின்ற திரோதமலம் ஒன்று. ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளைக் கொடுத்து மயக்கத்தைச் செய்யும் மாயாகாரணமலம் ஒன்று. ஆன்மாக்கடோறும் விரிந் தனுபவமாய் நிற்குங் கன்மமலம் ஒன்று. ஆன்மாக்களின் சுக துக்க விளைவுகட்கெல்லாம் இடமாய் நின்று அவற்றின் அறிவு, இச்சை செயல்களை வகதேசப்படுத்தும் மாயா காரியமாகிய மாயேயமலம் ஒன்று.

‡ ஆணவமலம்: எண்ணிறந்த ஆன்மாக்களோடுங் கூடிநின்று மறைத்துந் தானொன்று யிருப்பதாய், ஆன்மாக் களுடைய பக்குவா பக்குவங்கட்குத் தக்கதாக அவரவ ரிடங்களிலே மறைந்து நின்று, அந்த ஆன்மபோதங்களின் வீட்சியிலே நீங்குவதா யிருக்கிற தன் காரியமான எண் ணிறந்த சக்திகளை யுடையதாய், செறிந்த இருளென்னும் படி நின்று ஆன்மாக்களுக்கு மிக்க மறைப்புகள் செய்வ தாய், செம்பினுடன் கூடியிருக்கப்பட்ட காளிதமானது அந்தச் செம்புள்ளவன்றே யதனை மறைத்து உள்ளும் புறம்புங் கலந்து வெட்டுவாய் தோறும் நின்றாற்போல, ஆன்ம போதத்தோடுங் கலந்து மறைந்து கேவலத்தில் அவாரக சத்தியானும், சகலத்தில் அதோநியாமிக சத்தி யானும், அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நின்ற அநாதிமலமாய், ஆன்மாவினிச்சாஞானக் கிரியைகள் சற் றுஞ் சீவியாதபடி மறைத்து நிற்கும்.

திரோதான மலம்: ஆணவமலம் நசிக்கும்படி பதியி னுடைய அருட்சத்தியானது அந்த ஆணவமலத்தோடுங்

---

* பச் = பந்தித்தல், அ = கருவிப்பொருள் விகுதி.

‡ ஆன்மாக்களை யணுத்தன்மை செய்தலில் ஆணவமெனப் பெயர் பெறும். ஆணவம் சடமாதலி னதற்குச் செய்தி யுண்டோ? விடம், கள், பாடாணம், தீ, காற்று, நீர் முதலிய சடங்கட்குச் செய்தி யுண்டானாற்போலும்.

கூடித் திரோபவித்து நின்று காரியப்படுத்துகையான் மூலமலமென வுபசரிக்கப்பட்டுத் திரோதமாய் நின்று காரியப்படுத்தி மலபாகம் வருத்தின அருளானது அவர்களிடத்துத் திருவை சனித்துப் பதியோ டிரண்டறப் பொருந்து முறைமையை யுண்டாக்கும்.

மாயாமலம்: மலகன்மங்களோடு விரவாது சுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமா யிருப்பது சுத்த மாயை; இம் மாயையின் கீழா யடங்கி, மலகன்மங்களோடு விரவி, சுத்தாசுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமா யிருப்பது அசுத்த மாயை; இவ்வசுத்த மாயையின் தூலபரிணமமா யசுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமா யிருப்பது பிரகிருதி மாயை; ஆக மூன்றும். இவற்றிற்கு முறையே விந்து, மோகினி, மான் என்றுஞ் சொல்லப்படும்.

சுத்த மாயையின் தோற்றம்: பதியினுடைய சத்தியாற் குடிலையாகிய சுத்த மாயையிலே (சர்வான்மாக்களுக்கும் அறிவை யெழுப்புவித்து நிற்கிற ஞானமாகிய) நாத தத்துவம் தோன்றும். நாதத்திலே (சர்வான்மாக்களுக்கு முண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கிற) விந்து தத்துவம் தோன்றும். விந்துவிலே (நாதவிந்துக்க ளிரண்டுங் கூடின அவசரமாகிய) சாதாக்கிய தத்துவம் தோன்றும். சாதாக்கியத்திலே (கிரியை யேறி ஞானங் குறைந்துநின்ற அவசரமாகிய) ஈச்சுர தத்துவம் தோன்றும். ஈச்சுரதத்துவத்திலே (ஞானமேறிக் கிரியை குறைந்துநின்ற அவசரமாகிய) சுத்தவித்தை தோன்றும். இந்தத் தத்துவங்க ளைந்துந் தோன்றின வொழுங்கிலே தத்துவ கர்த்தர்கள் முறையே சிவம், சத்தி, சதாசிவம், மகேச்சுரம், உருத்திரன் ஆகிய ஐவருந் தோன்றி யவற்றோடு பொருந்தி நிற்பார்கள். மேற் சொன்ன விந்துவிலே சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யென்னும் வாக்குகள் நான்கும், ஐம்பத்தோரக்கரங்களும், எண்பத்தொரு பதங்களும், சத்தகோடி மகாமந்திரங்களும், வேதாகம புராண சாத்திரங்களும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் தங்கட்குத் தனு கரண புவன போகங்களும், பத முத்திகளும், பஞ்ச கலைகளுந்தோன்றும்.

அசுத்த மாயை: அசுத்த மாயையானது நாசமில்லாததாய், உருவமில்லாததாய், ஒன்றாய், சகல சகத்திற்கு மொரு

காரணமாய், சடமாய், சர்வ வியாபியாய், பதிக்குப் பரிக்கிரக சத்தியாய், ஆன்மாக்களுக்குத் தநு கரண முண்டாக்குவதாய், மலங்களி லொன்றாய், விபரீத வுணர்வைச் செய்வதாயுள்ளது.

அசுத்தமாயையின் தோற்றம் : அசுத்த மாயையில் காலமும், நியதியும், கலையுந் தோன்றும் ; கலையில் வித்தை தோன்றும் ; வித்தையில் அராகந் தோன்றும் ; ஆக இவ்வைந்துங் கூடிப் பஞ்ச கஞ்சுகமாம். இவற்றோடுங் கூடிய ஆன்மா பஞ்சகஞ்சுகனும். கலையிலே மூலப்பகுதி அவ்வியத்த குண வடிவாய்த் தோன்றித் தன்கணின்றும் வியத்தமாய்த் தரப்படுங் குணதத்துவம் ; சாத்துவிகம், இராசதம், தாமத மென முக் குணங்கள் தோன்றும். அவற்று ளொவ்வொன்றும் முத்திறப்பட்டு ஒன்பது வகையாம். அவ்வியத்த மாகிய பிரகிருதியில் பஞ்சகிலேசமு முண்டாம். இம் முக் குணத்தில் ஒருகுணம் ஏறினவிடம் புத்தி. புத்தியில் ஆங்காரந் தோன்றும். இவ் வாங்காரம் தைசதம், வைகரி, பூதாதி யென மூன்றாம். தைசதவாங்காரம் சாத்துவிக குணத்தைப் பொருந்தில் மனமும், ஞானேந்திரியமைந்துந் தோன்றும். வைகரியாங்காரம் ராசத குணத்தைப் பொருந்தில் கன்மேந்திரிய மைந்துந் தோன்றும். பூதாதியாங்காரந் தாமத குணத்தைப் பொருந்தில் தன்மாத்திரைகள் ஐந்துந் தோன்றும். இவ் வைந்தினும் பூதங்களைந்துந் தோன்றும். இவ்வைந்தினும் பஞ்சதேவர்கள் பொருந்துவர்.

பிரகிருதி தத்துவத்தில் ஆன்மதத்துவ மிருபத்து நான்குந் தோன்றும்.

கன்மமலம் : ஆன்மாக்க ளெடுக்கப்பட்ட உடம்புகளுக்கு முன்னிலைக் காரணமாய், பலவிதமான புசிப்புக்களை யுண்டாக்குவதாய், ஜநந மரணத்தை யுண்டாக்குவதாய், பல பேதங்களா யிருப்பதாய், ஆன்மாக்கடோறுஞ் சென்று பொருந்துவதாய், மனத்தினாலும் வாக்கினாலும் காயத்தினாலுஞ் செய்யப்படு மியல்பினை யுடையதாய், புத்தியிலே நிற்பதாய், இருவினையான புண்ணிய பாவங்களாய், சங்கார காலத்து மாயாகாரணத்திலே சென்று பொருந்தும். இது, நல்ல சாதி தீய சாதி தீர்க்காயுள் அற்பவாயுள், நல்ல போகம் பொல்லாப் போகம் என மூன்று விதமாம். இக்

கன்மங்கள் மூன்றும் ஓரான்மாவிலே அநாதியே கூடியுள்ளனவாம். இப் புசிப்பு ஊழ்வினையாலல்லது உண்டாகாது : அது முன்பு ஆர்ச்சித்த வொழுங்கிலேயும்,* வன்மை மென்மைகளுக் கிடாயும் வரும். இக்கன்மம் : சூக்கும கன்மம், அதிசூக்கும கன்மம், தூல கன்மம் என மூன்றும். அவை முறையே சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் ஆம்.

சஞ்சிதம் : அநாதி தொடுத்துச் சநநந்தோறும் ஆர்ச்சித்த வினை புசித்து மிஞ்சியது, †ஆறத்துவாவிலேயும் கட்டுப்பட்டிருப்பது, பயிர் வினைஞனொருவன் தன் முயற்சியால் விளைந்த தானியத்தைச் சேர்ப்பித்திருக்கும் நெற்களஞ்சியம் போலும்.

பிராரத்துவம் : சஞ்சிதத்திலே சிறிது புசிக்கப்பட்ட வினை யொரு சரீரத்தை யெடுப்பித்துச் சாதி, ஆயுள், போகம் கொடுக்கும். இது, களஞ்சியத்திலிருந்து தானியத்தை யெடுத்தனுபவித்து வருதல் போலும்.

ஆகாமியம் : பிராரத்துவம் புசிக்கையில் வந்தேறுகிற புண்ணிய பாவங்கள். அவையாவன :—மனோ வாக்குக் காயங்களினாற் செய்யப்படும் நற்றொழிலுந் தீத்தொழிலுமாம். களஞ்சியத்தினின்றும் எடுத்தனுபவித்து வருங்கால் மறுபடியுங் களஞ்சியங் குறையாவண்ணம் விளைவித்துப் பூர்த்தி பண்ணிக்கொள்வது போலும்.

மேற்சொன்ன பிராரத்துவம் ஆதி தெய்வீகம் ஆதி பௌதிகம், ஆதியான்மிகம் என மூன்றும்.

ஆதி தெய்வீகம் : மாதாவின் கருப்பத்தி லிருக்குமிடத் துண்டான விசனம், பின் ஜநநம், நரை, திரை, யம தண்டம், நரகவேதனை முதலிய.

---

* ஒருவன் பனம் விதையை மண்ணிலே நட்டான் ; பின்பு தெங்கு வைத்தான் ; பின்பு கத்திரி நட்டான் ; பின்பு கீரை விதைத்தான். கீரை பதினைந்து நாளையிலும், கத்திரி யொருமாதத்திலேயும், தெங்கு ஐந்து வருடத்திலும், பனை முப்பது வருடத்திலும் பலன் கொடுப்பதுபோல.

†கலாத்துவா, மந்திராத்துவா, புவனத்துவா, வன்னத்துவா, பதாத்துவா, தத்துவாத்துவா.

ஆதிபௌதிகம் : குளிர், வெப்பம், மழை, காற்று, மின்னல், இடி, சுவர்விழுதல், கல்விழுதல் முதலிய.

ஆதியான்மிகம் : தத்தஞ் சரீரத்திலுண்டான வியாதிகளினாலும், மிருகங்களினாலும், இராஜாங்கத்தாலும், பசாசுகளாலும், கள்வராலும், மனிதராலும், உண்டாகுந் துக்கம், பிறருடைய கல்வியும் சௌந்தரியமும் செல்வமுங் கண்டு பொறாமை கொள்ளல், அபிமானங் கெடுதல், எழுந்தது புத்தியாகச்செய்தல், கோபித்தல் முதலிய.

மாயேய மலம் : ஆன்மாக்களுக்கு மலத்தால் விழுங்கப்பட்ட ஞானங் கிரியைகளை வெளிப்படுத்தும் பொருட்டும், தாம்செய்த வினைகளை யனுபவித் தொழிக்கும்பொருட்டும், இன்றியமையாத தனு கரண புவன போகங்கள் காரியப்படு மவசரத்து முற்கூறிய அசுத்த மாயாகரணத்திலே நின்று சிவசத்திகள் அவற்றைத் தோற்றுவிக்க அவற்றோடும் பொருந்தி நடத்தப்பட்ட சுத்த மாயையின் திரட்சியாகிய சுத்த தத்துவங்களாம்.

சுத்த தத்துவங்களை மலமென்னலாமோ வெனில், எனலாம். சிவனுடைய அருட்சத்தியானது திரோதமாய் நின்று மலத்தைக் காரியப்படுத்த, அதை மலமென உபசரித்தாற் போலும்.

இதுகாறுங் கூறிய ஆணவம், திரோதானகாரி, மாயை, கன்மம், மாயேயம் என்னும் இப் பஞ்ச மலங்களை ஆன்மா பொருந்தி நின்று பிறப்பிலும் இருப்பிலும் இறப்பிலும் தங்கிப் பூமி, பாதாளம், சுவர்க்கமென்னு மூன்றுலகத்துங் கொள்ளிவட்டம் போலும், காற்றாடிபோலும் நிமிடத்திலலைந்து சிவாஞ்ஞைப்படி நடப்பன்.

தத்துவம்

உட்கருவிகள் 36

பூதம் ரு : பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

ஞானேந்திரியம் ரு : சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்.

தன்மாத்திரை ரு : சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

கன்மேந்திரியம் ரு: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

அந்தக்கரணம் ச: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

ஆக ஆன்ம தத்துவம் - உச.

வித்தியா தத்துவம் எ: காலம், நியதி, வித்தை, கலை, அராகம், புருடன், மாயை.

சுத்த தத்துவம் ரு: சுத்த வித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம்.

ஆக உட்கருவிகள் - கூசு.

புறக்கருவிகள் 60

பிருதிவியின் கூறு ரு: மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை.

அப்புவின் கூறு ரு: நீர், உதிரம், சுக்கிலம், மூளை, பச்சை.

தேயுவின் கூறு ரு: ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்.

வாயுவின் கூறு ரு: ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல்.

ஆகாயத்தின் கூறு ரு: குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்.

பிருதிவியின் வழிநாடி-க0: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருஷன், குகு, சங்கினி.

வாயுவின் வழிநாடி-க0: பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன்.

ஆகாயத்தின் வழியேடணை-ந: அருத்தவேடணை, புத்திர வேடணை, உலகவேடணை.

வாக்காதியின் வழிதொழில் ரு: வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.

பிரகிருதியின் வழிகுணம் - ந: சாத்துவிகம், இராசதம், தாமதம்.

விந்துவின் வழிவாக்கு - ௪ : சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி.

ஆகப் புறக்கருவிகள் - ௬௦.

ஆக தத்துவங்கள் - ௯௬.

தத்துவத்தின் தொழில்

வடிவு : பிருதிவி நாற்கோணம், அப்பு அர்த்த சந்திரன், தேயு முக்கோணம், வாயு அறுகோணம், ஆகாயம் வட்டம்.

நிறம் : பிருதிவி பொன், அப்பு வெண்மை, தேயு சிவப்பு, வாயு கருமை, ஆகாயம் புகை.

குறி : பிருதிவிக்கு வச்சிரம், அப்புவுக்குத் தாமரை, தேயுவுக்கு சுவத்திகம், வாயுவுக்கு அறுபுள்ளி, ஆகாயத்திற்கு அமுதவிந்து.

தெய்வம் : பிருதிவிக்குப் பிரமன், அப்புவுக்கு விண்டு, தேயுவுக்கு உருத்திரன், வாயுவுக்கு மகேசன், ஆகாயத்திற்குச் சதாசிவன்.

குணம் : பிருதிவி கடினம், அப்பு நெகிழ்வு, தேயு சுடுகை, வாயு திரட்டல், ஆகாயம் நிரந்தரம்.

ஞானேந்திரியங்களின் தொழில்

சோத்திரம் : ஆகாயத்தினிடமாக நின்று செவியைப் பொருந்திச் சத்தத்தை யறியும்.

தொக்கு : வாயுவினிடமாக நின்று சரிரத்தைப் பொருந்திப் பரிசத்தை யறியும்.

சட்சு : தேயுவினிடமாகநின்று கண்ணைப் பொருந்தி ரூபத்தைக் காணும்.

சிங்ஙுவை : அப்புவினிடமாகநின்று நாவைப் பொருந்தி ரசத்தை யறியும்.

ஆக்கிராணம் : பிருதிவினிடமாக நின்று மூக்கைப் பொருந்திக் கந்தத்தை யறியும்.

கன்மேந்திரியங்களின் தொழில்

வாக்கு : ஆகாயத்தினிடமாக நின்று வசனிக்கும்.

பாதம் : வாயுவினிடமாக நின்று கமனிக்கும்.

பாணி : தேயுவினிடமாக நின்று இடுதலேற்றலைச் செய்யும்.

பாயுரு : அப்புவினிடமாக நின்று மலசலத்தைக் கழிக்கும்.

உபத்தம் : பிருதிவியினிடமாக நின்று சுக்கிலத்தைக் கழிக்கும்.

தன்மாத்திரைகளின் தொழில்

சத்தாதிகள் ஐந்தும் சுரோத்திராதிகளுக்கு விடயமாக இருக்கும்.

அந்தக்கரணங்களின் தொழில்

மனம் பற்றும், புத்தி நிச்சயிக்கும், சித்தம் சிந்திக்கும், அகங்காரம் கொண்டெழுப்பும்.

வித்தியா தத்துவங்களின் தொழில்

காலம் : கழிகாலத் தெல்லையையும், நிகழ்காலத்துப் பலத்தையும், எதிர்காலத்துப் புதுமையையும், பொருத்துவிக்கும்.

நியதி : எந்தக்காலமும் கன்மத்தை யிவ்வளவென்று நிச்சயம்பண்ணி நிறுத்தும்.

கலை : ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குக் கிரியையை யெழுப்பும்.

வித்தை : ஆன்மாவுக்குச் சீக்கிரத்திலே அறிவை யெழுப்பும்.

அராகம் : பெற்ற பதார்த்தங்களைச் சிறிதாக்கிப் பெருததிலே யிச்சையை யுண்டாக்கும்.

புருடன் : கலையாதி பஞ்சகஞ்சுகத்துடனே கூடிச் சத்தாதி விடயங்களை நுகரு மவசரம்.

மாயை : ஒன்றையும் நினைக்கவொட்டாமல் மயக்கத்தைச் செய்யும்.

சுத்த தத்துவங்களின் தொழில்

374-வது பக்கத்திலுள்ள சுத்தமாயையின் தோற்றத்தைக் காண்க.

பிருதிவியின் வழிநாடிகளின் தொழில்

இடைகலை : இடது மூக்கில் நிற்கும்.

பிங்கலை : வலது மூக்கில் நிற்கும்.

சுழுமுனை : மத்தியில் நிற்கும்.

காந்தாரி : கண்ணில் நிற்கும்.

அத்தி : உடலெங்கும் நிற்கும்.

சிங்குவை : தாலுவிலே நிற்கும்.

அலம்புடை : செவியி னிற்கும்.

புருஷன் : பாதத்தி னிற்கும்.

குகு : மார்பி னிற்கும்.

சங்குனி : கழுத்தி னிற்கும்.

வாயுவின் வழிநாடிகளின் தொழில்

பிராணன் : மூலாதாரத்தில் தோன்றி இடை பிங்கலையாக ஏறிக் கபாலத்தளவுஞ் சென்று, நாசியில் கஉ - அங்குலம் புறப்பட்டு, ச - அங்குலம் வெளியிற் போய், அ - அங்குல முள்ளடங்கும். இவ்வாறு ஒரு நாளைக்கு உக,சூ00 சுவாசம் நடக்கும். இதில் எஉ00 பாழ்போய், கசு,சு00 சுவாச முள்ளடங்கும்.

அபானன்: குதத்தினின்று மலசலங்களைக் கழிப்பிக்கும்.

உதானன் : விக்கல் இருமல் அவத்தை பண்ணுவிக்கும்.

வியானன் : உண்ட அன்னசாரத்தை எஉ,000 நாடிகளிலும் கலப்பிக்கும்.

சமானன் : யாவையும் சமன் பண்ணும்.

நாகன் : இருமல் தும்மல் உண்டாக்கும்.

கூர்மன் : கண்ணோற்றல் செய்யும்.

கிரிகான் : சோம்பல், கொட்டாவி யுண்டாக்கும்.

தேவதத்தன் : இமைக்கும், நகைப்பிக்கும்.

தனஞ்சேயன் : உடம்பை வீங்கவும் விரியவுஞ் செய்து, கபாலத்தை வெடிப்பித்துப் போகும்.

ஏடணைகளின் தொழில்

அருத்தவேடணை : திரவியம் முதலியவற்றால் வரும் பிணக்கு.

புத்திரவேடணை : புத்திரன் முதலிய சுற்றத்தாரால் வரும் பிணக்கு.

உலகவேடணை: உலகமுதலிய சங்கத்தால்வரும் பிணக்கு.

குணங்களின் தொழில்

சாத்துவிகம் : தவம், சமம், கல்வி, சௌரியம், பொறுமை, கிருபை, சந்தோஷம், அறிவு, அடக்கம் முதலிய.

தாமதம் : மந்தம், கோள், அகௌரவம், நித்திரை, மதம், மச்சரம், அதன்மம், அறியாமை, சோம்பல் முதலிய.

இராசதம் : சௌரியம், உத்சாகம், அபிமானம், கிருபையின்மை, இடும்பை முதலிய.

வாக்குகளின் தொழில்

வைகரி : வைகரியென்னும் வாக்குச் செவியாற் கேட்கப்படுவதாய், அருத்தத்தோடு கூடியதாய், உதானவாயு உந்தியடியாய்த் தோன்றித் தலையையும் மிடற்றையும், நெஞ்சையும் பொருந்துதலா லுண்டாகிய அட்சரங்களை விபரீத மறக் கிரமமாக வுடையதாய், புத்தியை யறிகாரணமா யுள்ளதாய்ப் பிராணவாயுவைப் பொருந்தி வெளியே புறப்பட்டுக் காரியப்படும்.

மத்திமை : மத்திமையென்னும் வாக்குக் கண்டத்தினுள்ளே சவிகற்பமா யுணரத்தக்க வோசையாகிய செவிக்கு விடயமாகாமல், பிராணவாயுவின் விருத்தியைப் பொருந்தாமல், தெளிவாகிய அக்கரங்களைச் சொல்லுஞ் செயலில்லாது வைகரிக்கு வேறாய் மெள்ள வெழுந்திடும்.

பைரந்தீ: பைசந்தி வாக்கானது வைகரியில் ஒன்றோ டொன் றொவ்வாத வடிவினையுடையதாய் வேறுபட்ட வன்னங்கள் தோற்றுதலை முறையே யொடுக்கித் தானே விளங்குவதாய், மயிலின் முட்டை தரிக்குஞ் சலத்தை யொத்து நினைவு மாத்திரையாய் நிற்பது.

சூக்குமை: சூக்குமை வாக்கானது பரசரீரத்திலுள்ளாக நாதமாத்திரையாய் விளங்குதலும், ஞானமாத்திரைக் கேதுவாகிய இலக்கணத்தையுமுடையது. சில சுத்த மாயா ரூபமாய்க் கேடின்றி நிலைபெறுவது. இதனை யுள்ளபடி காணப் பெறுவார்க்குச் சுத்த மாயா புவனத்தின் கண்ணதாகிய அபரமுத்திப் பெரும்போக முண்டாகும்.

இந்த வாக்கு நான்குந் தோன்றுகைக்குக் காரணமாயிருக்கின்ற பந்ரமை யென்றொரு வாக்குண்டு. இதற்குத் தானம் மூலாதாரம். அது பிரணவ சொரூபம். இந்த ஐந்து வாக்குகளும் நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து சிவசக்திகளாற் காரியப்படுத்தப்பட்டுச் சிவ தத்துவ முதலிய பஞ்ச தத்துவங்களிலிருக்கும்.

இன்றியமையா தறியவேண்டிய தத்துவங்களின் றொழில்களை மாத்திரம் ஈண்டுக் கூறினும்.

பஞ்ச கலைகள்

நிவிர்த்தி கலை: தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுடைய சங்கற்ப நிவிர்த்தி செய்கையாம்.

பிரதிட்டா கலை: தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்கு முன் சொன்ன சங்கற்பம் விடுதி நிலைபெற்றுத் திடமாகப் பிரதிட்டிக்கையாம்.

வித்தியா கலை: தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்குச் சங்கற்ப விடுதி நிலைபெற்றுத் திடமானத்திற் சர்வார்த்த ஞானம் பிரகாசிப்பிக்கையாம்.

சாந்தி கலை: தன்னிடத்தில் பொருந்தின ஆன்மாக்களுக்குச் சர்வார்த்த ஞானப்பிரகாசத்தால் இராக துவேஷமின்றி யிருக்கை.

சாந்தியதீத கலை: தன்னிற் பொருந்தின ஆன்மாக் களுக்கு விகற்பஞானஞ் சாந்தமானதென்கிற முன்னினை வுங் கழிந்து அதீதமாய்ப் பரமாகச் சொரூபமாய் நிற்கை.

இவ்வைந்து கலைகளுள் மந்திரங்கள், பதங்கள், அட் சரங்கள், புவனங்கள், தத்துவங்கள் விரவியிருத்தலை விரிவு நூலிற் காண்க.

ஆறுதாரம்

மூலாதாரம்: குதத்திற்கும் கோசத்திற்கும் நடு, முக் கோணம், நாலிதழ்க் கமலம் மாணிக்க நிறம், கணபதி, குண்டலி, சத்தி, ஓங்காரம்.

சுவாதிட்டானம்: கோசத்திற்கும் நாபிக்கும் நடு, நாற் சதுரம், ஆறிதழ்க் கமலம், செம்பொன்னிறம், பிரமா, சரஸ்வதி, நகாரம்.

மணிபூரகம்: நாபிக் கமலம், மூன்றும் பிறை, பத்தி தழ்க் கமலம், மரகத நிறம், விஷ்ணு, லட்சுமி, மகாரம்.

அநாகதம்: இருதய கமலம், பன்னிரண்டிதழ்க் கமலம், முக்கோணம், ஸ்படிக நிறம், உருத்திரன், பார்வதி, சிகாரம்.

விசுத்தி: கண்டத்தானம், பதினாறிதழ்க் கமலம், அறு கோணம், மேக நிறம், மகேசுவரன், மகேசுவரி, வகாரம்.

ஆஞ்ஞை: லலாடத்தானம், மூன்றிதழ்க் கமலம், வட் டம், படிக நிறம், சதாசிவம், மனோன்மணி, யகாரம்

மண்டலம்

சந்திர மண்டலம்: மூலாதாரந் தொடங்கி ஒவ்வோ ரெழுத்தை முன்னிட்டுக்கொண்டு சிரசு நடுவில் கோடி சூரியர் உதயமானாற்போலப் பிரகாசிக்கும். இந்த அமிர்த கலை அக்கினி மண்டலத்தை நோக்கிச் சோதியாய் நிற்கும்.

அதீத மண்டலம்: இருதய கமலத்தில் அறுகோண மாய், எட்டு இதழுடைய ஒரு புஷ்பமா யிருக்கும். இது வாழைப்பூப்போல் கீழ்நோக்கி யிருக்கும்.

அக்கினி மண்டலம்: பிருதிவியும் அப்புவுங் கூடின விடத்தில் நாற்சதுரமாய், நடுவே முக்கோணமாய், நாலித ழுடைய ஒரு புஷ்பமா யிருக்கும். (தொடரும்)

1-8-56 புதன்: சென்னை அடியார் மன்றம். பட்டினத்தார் பாடல் என்பதைப்பற்றித் தவத்திரு. ஐயாறடிகள் பேசினார்கள்.

12-8-56 ஞாயிறு: அடியார் மன்றம். சுந்தரமூர்த்திகளைக் குறித்து, ப. இராமநாதம் பிள்ளையவர்கள் சிரிவுரை நிகழ்த்துவார்கள்.

12, 13-8-56 திருவஞ்சைக்களம் (கொச்சி) - கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார் எப்போதைப்போலவே திருவாராதனை முதலியவை நடத்துவார்கள். அனைவரும் வரலாம். மாகேசுரபூசை நடைபெறும்.

தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களுக்கு மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதினம் செந்தமிழ்க் கலைமணி எனும் பட்டத்தை வழங்கியுளது. இவர் இலங்கை அரசினர் ஆங்கில ஆசிரியர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், கொழும்பு நகர நூல் நிலையக் குழு உறுப்பினராகவும், தமிழ்மறைக் கழகம், இலங்கை வானொலித் தமிழ்க் கலை மன்றம், இரத்துமலானை தமிழ் முன்னேற்றக் கழகம் முதலியவற்றின் தலைவராகவும், கொழும்பு தமிழ்ச் சங்கம், விவேகானந்த சபை, அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றின் துணைத்தலைவராகவும், இலங்கைத் தமிழர் சால்புக் கழகத்தின் இணைச்செயலாளராகவும் இருந்து பல பெரும் பணிகளை ஆற்றிவருகிறார்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
பொன்விழா மலர்

மிக மிகக் கவர்ச்சியான வெளியீடு. இதில் ஐம்பத்தொரு கட்டுரைகள் உள்ளன. சமாஜத்தின் ஐம்பது ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் தெளிவாக எழுதப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டுகளில் நடந்த நிறைவு விழாக்களின் தலைவர்கள் ; நடைபெற்ற இடங்கள்; மங்கையர் மாநாடு, இளைஞர் மாநாட்டு விவரங்கள் ; சமாஜத் தொண்டர்கள் தொண்ணூற்றொருவர் பற்றிய குறிப்புக்கள் ; உயர்திருவாளர்கள்: ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை, ஸர்.பொன்னம்பலம்இராமநாதன், பொன்விழாத்தலைவர் கனம் சு. நடேசப் பிள்ளை, திரு.வி.க. முதலிய முப்பதின்மர் உருவப்படங்கள் ; வேறு பற்பல சிறப்புக்கள் இதில் மிளிர்கின்றன. கட்டுரையாளர்களுள் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, தணிகைமணி ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், சித்தாந்த ரத்னகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், திரு. அ. மு. பரமசிவானந்தம் முதலியோர் உள்ளனர். இருநூற்று நாற்பது பக்கங் கொண்ட அழகிய பதிப்பு.

விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பன்னிரண்டு. உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்க. வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.

கிடைக்கும் இடம் :

பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi Edited by C M Ramachandran Chettiar, B..A, .B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 2, Seetha Rama Nagar, Cuddalore N. T.